
பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை 06.04.2025 கதிர் 143



இது ரகசியம் அல்ல!

இலங்கையில் தமது போராட்ட வழிமுறைகள் மூலம் ஆளும்தரப்பிடமிருந்து ஓர் அரசியல் தீர்வைப் பெற முடியாது தவித்துவரும் தமிழ் அரசியல் கட்சிகள், ☞ 2

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# ருஸ்டிக்கான 90 நாள் தடை உத்தரவை ஜனாதிபதி அநுரவே நேரில் பிறப்பித்தார்

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக சுரொட்டி ஒட்டினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட முகமட் ருஷ்டியை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கும் உத்தரவை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவே பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் பிறப்பித்துள்ளார். 90 நாட்களுக்கான இந்தத் தடை உத்தரவைத் தான் பார்த்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளதாவது

கொழும்பில் 22 வயது முகமது ருஸ்டி மார்ச் 25 கைது செய்யப்பட்டமை குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி ருஸ்டியை 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைப்பதற்கு உத்தரவிட்டுள்ள ஆவணத்தை சர்வதேச மன்னிப்புச்சபை பார்வையிட்டுள்ளது.

இலங்கையின் புதிய தலைமை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கப்போவதாக அதன் ஆளும்தரப்பு வாக்குறுயளித்துள்ள போதிலும், அதிகாரிகள் அதனை தொடர்ச்சியாகப் பயன்படுத்துவது குறித்து நாங்கள் ஆழ்ந்த ஏமாற்றமடைந்துள்ளோம்.

ருஸ்டியை தடுத்துவைப்பதற்கான உத்தரவில், அவர் தீவிரவாத சித்தாந்தங்களால் தூண்டப்பட்டு, சமூகங்களிற்கு இடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்படுவது மற்றும் பாதுகாப்பு படையினரிடம் அத்தகைய தகவல்களை தெரிந்தே மறைப்பது குறித்து சந்தேகம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருஸ்டி கைது செய்யப்பட்டு இரண்டு வாரங்களான பின்னர் ☞ 9

## சஜித்தையும் சந்தித்தார் மோடி

இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இங்கு சமூகம், அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பலவற்றை பரஸ்பரம் இரு தரப்பினரும் பரிமாறிக் கொண்டனர்.

அதேபோல், எமது நாடு வங்குரோத்தடைந்திருந்த சந்தர்ப்பத்தில் ஒரு தனி நாடாக எமது நாட்டுக்கு அதிக நிதி ஆதரவுகளை வழங்கி அதிக உதவிகளை செய்த நாடு இந்தியாவே என்றும், அத்தருணத்தில் நாட்டுக்கு உதவும் வகையில் இந்திய அரசு அளித்த ஒத்துழைப்பை பெரும் மனம் கொண்டு பாராட்டுகிறேன் என்றும், இதற்காக இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய மக்களுக்கும் ☞ 8

## இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தால் பாதிப்பில்லை

### பாதுகாப்புச் செயலர் விளக்கம்

இலங்கை - இந்தியவுக்கு இடையிலான புதிய பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளால் இருநாடுகளின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தாது என்று பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்த தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புதிய பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து தெளிவுப்படுத்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை - இந்திய பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இரு நாடுகளினதும் பாதுகாப்பு உறவுகள் வலுப்பெறும் என்பதுடன், பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்புகள், அறிவியல் மற்றும் தகவல் பரிமாற்றம் மேலும் விரிவாக்கப்படும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ☞ 9

* தமிழர் அபிலாஷை நிறைவேற்றம்
* முழுமையான அரசமைப்பு அமுல்
* மாகாண சபைத் தேர்தல் நடத்தல்

# எல்லாம் நடக்கும் என்று நம்புகின்றாராரம் மோடி

### கொழும்பில் நேற்று அவரே சொன்னார்

இலங்கை அரசு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்றும் இலங்கை அரசமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான வாக்குறுதியை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம் என்று தெரிவித்தார் இந்தியப் பிரதமர் மோடி.

இரு நாட்டுத் தலைவர்களதும் சந்திப்புக்களின் பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையின் போது பிரதமர் நரேந்திரமோடியின் தனது உரையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி திசாநாயக்கவால் ☞ 2

## அமெரிக்க வரி குறித்து ஜனாதிபதி மீள ஆராய்வு

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை நேற்று மீண்டும் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

இந்த வரி விதிப்பின்போது நாடென்ற ரீதியில் எவ்வாறு செயல்படவேண்டும் என்பது குறித்தும், எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குழுவால் ☞ 9

## பொது நிலைப்பாட்டை எட்ட புதுடில்லிக்கு தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசுங்கள்

### மோடியிடம் கஜேந்திரகுமார் கோரிக்கை

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீறாமல், ஆனால் அதே நேரம் ஒற்றையாட்சி முறைமையைத் தாண்டி, ஒரு சமஷ்டி ஏற்பாட்டை முழுமையாக அடையக்கூடிய - இந்தியாவும் ஏற்றுக்கொள்ளத்தக்க-பொதுநிலைப்பாடு ஒன்றை எட்டுவதற்காக தமிழ்க் கட்சிகளை புதுடில்லிக்கு அழைத்துப்பேச உதவுங்கள் என்று இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களாக இந்தியப் பிரதமரை நேற்றுக் கொழும்பில் சந்தித்துப் பேசிய ☞ 8

## இலங்கையில் சமஷ்டி உருவாக இந்திய ஒத்துழைப்பு அவசியம்

### மோடியிடம் தமிழ் கட்சிகள் வலியுறுத்து

13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை. அத்திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காண முடியாது. ஆகவே, ஒற்றையாட்சிக்கு அப்பால் சென்று சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடன் தீர்வு காணப்படுவதற்கு இந்தியாவின் முழுமையான ☞ 8

## இந்தியா – இலங்கை இடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

### நேற்றுக் கைச்சாத்திடப்பட்டன

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பல்வேறு துறைகளில் கைச்சாத்திடப்பட்ட 07 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் பரிமாற்றம் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு முன்னிலையில் இடம்பெற்றது.

இந்திய-இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் வலுசக்தி, டிஜிட்டல்மயமாக்கல், பாதுகாப்பு, சுகாதாரம் ஆகிய ☞ 8

## இலங்கைப் படை மருத்துவக் குழு மியான்மரில் உதவிக்கு விரைவு

சமீபத்திய நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இலங்கையின் முப்படைகளைச் சேர்ந்த 26 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்பு மருத்துவ மற்றும் அனர்த்த நிவாரணக் குழு நேற்று சிறப்பு விமானம் ஒன்றில் மியன்மாருக்குப் புறப்பட்டது.

இந்த அனர்த்த நிவாரணப் பணிகள், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அறிவுறுத்தல்களுக்கமைய, பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவின் (ஓய்வு) மேற்பார்வையின் கீழ் மேட்கொள்ளப்படுகின்றன. பிரிகேடியர் எச்.கே.பி. கருணாதிலக்க இந்தக் குழுவிற்கு ☞ 8

## அபிவிருத்தி நிறைந்த எதிர்காலத்தை இந்தியாவுடன் இணைந்து கட்டியெழுப்புவதே எதிர்பார்ப்பு - அநுர

இந்தியாவுடன் அயலவர்களாகவும், பங்காளிகளாகவும், வரலாற்று நண்பர்களாகவும் இணைந்து அபிவிருத்தி நிறைந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப எதிர்பார்க்கிறோம். இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும் உறுதியான பொருளாதார பயணத்திற்கும் இந்தியா காண்பிக்கும் முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்புக்காக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார ☞ 9

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதற்காகத் தஞ்சமடையக் கிடைத்துள்ள ஒரே இடம் இந்தியாதான் என்பதால் ஈழத் தமிழர்களின் எதிர்காலம் குறித்த சிந்தனையின்றி இந்தியாவிடம் குறிப்பாகப் புதுடில்லியிடம் சரணாகதி அரசியலை முன்னெடுக்கின்றன என்று தோன்றுகின்றது.

இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பின்பின்னர்தமிழ்க்காங்கிரஸ்தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்த கருத்துக்கள் இந்தக் கவலையைத் தோற்றுவிக்கின்றன. தீர்வையோ, சமஷ்டி அரசமைப்பையோ பெறமுடியாது முட்டுச் சந்தில் நிற்கும் தமிழ்க் கட்சிகள், வடக்கு கிழக்கை இந்தியாவிடம் அடகுவைக்கின்றன, எதிர்காலத்தில் அதனால் விளையக்கூடிய எந்தப் பாதிப்பையும் கருத்தில்கொள்ளாமல் இந்தியாவின் கால்களில் விழுந்து புரண்டு அழுக்கின்றன என்று தோன்றுகின்றது.

இத்தனைக்கும் அரசியல் தீர்வு விடயத்திலோ சமஷ்டி விடயத்திலோ இந்தியா எந்தத் துரும்பையும் தூக்கிப் போடாது, போட விரும்பாது, போட முடியாது என்று தெரிந்துகொண்டும் வடக்கு கிழக்கு நிலத்தை இந்தியாவிடம் தரைவார்க்கும் தமிழ்க் கட்சிகளின் இந்தப் போக்கு, எதிர்காலத்தில் ஈழத் தமிழர்களுக்குப் பேராபத்தை விளைவிக்கும் என்பது திண்ணம். இந்தியா என்பது வெறுமனே தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமல்ல என்பதும் வரலாறு முழுவதும் இலங்கை மீதான இந்திய மன்னர்களின் ஆக்கிரமிப்புக்களே இலங்கையில் ஈழத் தமிழர் - சிங்களவர் இனமுறகலுக்கு அடிப்படையான, ஆழமான காரணங்களில் ஒன்று என்பதையும் மறக்கக்கூடாது.

இந்தியாவாக இருந்தாலும் அளவுக்குமீறி வடக்கு கிழக்கில் அதற்கு இடமளிப்பது என்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆக்கிரப்பிற்கே வழிவகுக்கும். இதற்கான மிகச் சிறந்த உதாரணம் மன்னாரில் அதானி நிறுவனம் அமைக்க இருந்த காற்றாலைத் திட்டம். அந்தத் திட்டத்தை அங்குள்ள மக்கள் அடியோடு எதிர்க்கிறார்கள். அந்தத் திட்டம் அங்குள்ள மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கிவிடும். ஆனால், இந்தியப் பெரு நிறுவனங்களுக்கு அது பற்றிக் கவலையில்லை, இந்திய அரசுக்கும் அது பற்றிக் கவலையில்லை. இலாபம் மற்றும் மன்னாரின் அமைவிடம் என்பனவே அவற்றுக்கு முக்கியம். மன்னார் எதிர்காலத்தில் மக்கள் வாழ முடியாத இடமாகப்போனாலும் இந்தியா மற்றும் இந்தியப் பெரு நிறுவனங்கள் கவலைப்படா. ஏற்கனவே சம்பூரிலும் இதேபோன்றதொரு நிலைப்பாடு ஏற்பட்டதை நாம் மறக்கமுடியாது. சம்பூரில் படையினர் ஆக்கிரமித்திருந்த நிலத்தை அபிவிருத்தித் திட்டத்தின் பேரால் இந்தியா தனக்குரியதாக்கப் பார்த்ததை மறக்க முடியாது. மறைந்த தலைவர் சம்பந்தன் அதற்கு இடமளிக்காமல் அந்த நிலங்கள் தமிழ் மக்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். இப்படி தமது அபிவிருத்தித் திட்டத்திற்கு அவர் ஒத்துழைக்கவில்லைஎன்றகாரணத்தாலேயே அவர் இறக்கும் வரைக்கும் இந்திய ஆளும்தரப்பு அவரை டில்லிக்கு அழைத்துப் பேசவில்லை என்பதையும் மறக்கக்கூடாது. ஆக மொத்தத்தில் இந்திய நலன் என்று வருகின்றபோது அது ஈழத் தமிழர்களின் நிலம், உயிர், உடமை எதனையும் கருத்தில்கொள்ளாது. இந்தியா மட்டும் என்றில்லை வேறு எந்தவொரு வெளிநாடாக இருந்தாலும் அதைத்தான் செய்யும். இந்தியாவும் அதைத்தான் செய்யும்.

நிலமைஇப்படிஇருக்கையில்"இந்தியாவின் தேசியப்பாதுகாப்பைஉறுதிப்படுத்திக்கொண்டு, இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்தியா அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம்" என்கிறார் கஜேந்திரகுமார். இதனை அவர் மோடியிடம் நேரில் தெரிவித்திருக்கிறாராம்.

''இந்த அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதே நேரத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் வெளித் தரப்புகளுக்கு இப்பிராந்தியத்தில் காலூன்ற இடம் அளிக்கக்கூடாது என்ற எங்களது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினோம்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் இந்தியாவின் பாதுகாப்பு நோக்கோடு நோக்கப்படுகின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதேவேளையில் இந்தப் பிராந்தியத்தின் குடிசனப் பரம்பல் விகிதாசாரத்தை மாற்றி அமைக்காத விதத்தில் அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா முழு அளவில் ஈடுபட்டுப் பங்களிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டோம்'' என்றும் கஜேந்திரகுமார் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் எடுக்காமல் இப்படி இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்குமுழுமையாகஒத்துழைப்போம் என்று ''திறந்த காசோலை'' வழங்குவது பேராபத்து. அது மன்னார், சம்பூர் போன்று இரு தரப்புக்களுக்கும் இடையில் முரண்பாடுகளை மேலும் வளர்க்கக்கூடிய எது நிலைகளை ஏற்படுத்தக்கூடியது. அதனால் அரசியல் தீர்வு ஒன்றை மட்டும் கூர்மையாகக் கவனத்திகொண்டு வாக்குறுதி வழங்குவதையும் காய் நகர்த்துவதையும் தமிழ்த் தலைவர்கள் -குறைக்கவேண்டும், இந்தியாவின் நலனைவிட தமது மக்களின் நலன்கள் மீதே அவர்கள் முதலில் கவனம் செலுத்தவேண்டும். இதற்கு அர்த்தம் இந்தியாவைப் பகைத்துக்கொள்வது அல்ல. எமது மக்களின் நலன்களை மட்டுமே முதன்மைப்படுத்துவதும் மற்றவற்றை இரண்டாவது நிலைப்படுத்துவதும்தான்.

கஜேந்திரகுமாரின் கருத்துக்களையொட்டி நான்இந்தக்கருத்தைத்தெரிவிப்பதற்காகதமிழ் அரசுக்கட்சிமற்றும்ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என்பன ஏதோ இதற்கு மாறான கருத்தைக்கொண்ட கட்சி என்று கருதிவிடக்கூடாது. அவையும் இந்தியாவிடம் இதேபோன்ற சரணாகதி அரசியலைத்தான் மேற்கொள்கின்றன. இந்தியாவை எப்படியாவது திருப்திப்படுத்தி அரசியல் தீர்வை எட்டிவிடவேண்டும் என்று கல்லில் நார் உரிக்கும் இந்தக் கட்சிகளின் முயற்சியில் அவை ஈழத் தமிழர் நலன்களை அடகுவைப்பது பேராபத்து.

இந்தியா தனது நலன்களை முதன்மைப்படுத்துவது போன்று ஈழத் தமிழர்களின் நலன்களை முதன்மைப்படுத்துவதுதான் இந்தக் கட்சிகளின் தலையாய கடமையேன்றி, தாயக நிலத்தையும் மக்களையும் வேறு நாடுகளிடம் அடகு வைப்பதல்ல என்பதை யாராவது இவர்களுக்கு எடுத்துச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## எல்லாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இலங்கை மித்ர விபூஷண்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை என்னைப் பொறுத்தவரையில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். இந்த விருதானது என்னை மாத்திரம் கௌரவிக்கவில்லை, இது 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைக்கப்பெற்றிருக்கும் ஒரு கௌரவமாகவும். அதுமட்டுமல்ல இந்திய இலங்கை மக்களிடையில் காணப்படும் வரலாற்று ரீதியான உறவுகள் மற்றும் ஆழமான நட்புறவு ஆகியவற்றுக்கான சமர்ப்பணமாகவும் இது அமைகின்றது. இந்த கௌரவத்திற்காக ஜனாதிபதி, இலங்கை ஆளும்தரப்பு மற்றும் இலங்கை மக்களுக்காக நான் எனது இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதமராக நான் இலங்கைக்கு மேற்கொள்ளும் நான்காவது பயணம் இதுவாகும். கடந்த தடவை, 2019இல் மிகவும் உணர்வுபூர்வமான ஒரு தருணத்தில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் இலங்கை சகலவற்றிலிருந்தும் மீண்டு மிகவும் வலுவான இலங்கையாக மேலெழும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

இலங்கை மக்களின் ஊக்கம் மற்றும் பொறுமையை நான் பாராட்டுகின்றேன். அது மட்டுமல்ல இன்று இலங்கையானது மீண்டும் முன்னேற்ற பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதை காண்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன். இவ்வேளையில் உண்மையான ஒரு அயலக நண்பனாக தனது கடமைகளை இந்தியா நிறைவேற்றுகின்றமை பெருமைக்குரிய ஒரு விடயமாகும். 2019-ல் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாத தாக்குதலாக இருந்தாலும் சரி, கோவிட் பெரும் தொற்றாக இருந்தாலும்சரி, இல்லாதுவிடில் அண்மையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும்சரி சகல சந்தர்ப்பத்திலும் நாம் இலங்கை மக்களுடன் உறுதுணையாக நின்றிருக்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழின் மாபெரும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின், திருக்குறள் ஒன்று எனக்கு ஞாபகம் வருகின்றது.

செயற்கரிய யாவுள நட்பின்
அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு

அதாவது சவால்களையும் எதிரிகளையும் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் உண்மையான ஒரு நண்பனையோ அல்லது அவரது நட்புறவின் கவசத்தையோ காட்டிலும் வலுவான உத்தரவாதம் வேறொன்றும் இல்லை என்பதே அந்த திருக்குறளின் அர்த்தமாகும்.

திசநாயக்கா ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு பயணத்திற்காக இந்தியாவைத் தெரிவு செய்திருந்தார். அதேவேளை அவரது பதவிக்காலத்தில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு தலைவர் என்ற முன்னுரிமை எனக்கு கிடைக்க பெற்றுள்ளது. நமது சிறப்புமிக்க உறவுகளின் ஆழத்தை பிரதிபலிக்கும் ஒரு குறியீடு இதுவாகும்.

அது மட்டுமல்ல அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் மகாசாகர் கொள்கை ஆகியவற்றில் இலங்கைக்கு முக்கியத்துவமிக்க இடம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி திசாநாயக்கா அவர்கள் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த காலப்பகுதி முதலான நான்கு மாதங்களில் எமது ஒத்துழைப்பில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கையின் சக்தி தேவையினை பூர்த்தி செய்வதற்கு சம்பூர் சூரியக்கல மின் தொகுதி ஆதரவாக இருக்கும் என்பதனை குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல பல்பொருள் குழாய் இணைப்பு ஒன்றினை நிர்மாணித்தல் மற்றும் திருகோணமலையை சக்தி மையமாக அபிவிருத்தி செய்தல் ஆகியவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் உடன்படிக்கையானது சகல இலங்கையர்களுக்கும் நன்மை பயக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான மின் வலையமைப்பு இணைப்பு உடன்படிக்கையானது இலங்கை மின்சாரத்தை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகளை உருவாக்கும்.

இலங்கையிலுள்ள மத ஸ்தலங்களுக்காக 5000 கூரைமேல் சூரியக்கல மின் தொகுதிகளை விநியோகிக்கும் திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டமை தொடர்பில் மகிழ்வடைகின்றேன். அதேபோல இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்திற்கும் இந்தியா ஆதரவினை வழங்கும்.

'சப்கா சாத் சப்கா விகாஸ்' கொள்கையினை இந்தியா அங்கீகரித்துள்ளது. எமது பங்காளி நாடுகளின் முன்னுரிமைகளுக்கும் நாம் மதிப்பளிக்கின்றோம்.

கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம் 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான கடன்களை நாம் நன்கொடை திட்டங்களாக மாற்றி இருக்கின்றோம். நமது இருதரப்பு கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை இலங்கை மக்களுக்கான உடனடி உதவிகளையும் நிவாரணத்தையும் வழங்குவதற்கு வழிசமைக்கும். அதேவேளை வட்டி வீதங்களையும் குறைப்பதற்கு நாம் தீர்மானித்திருக்கின்றோம். இன்று கூட, இலங்கை மக்களுடன் இந்தியா துணை நிற்கின்றது என்பதனையே இவ்வாறான விடயங்கள் எடுத்தியம்புகின்றன.

கிழக்கு மாகாணத்தின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக 2.4 பில்லியன் இலங்கை ரூபா உதவிப்பொதி ஒன்று வழங்கப்பட உள்ளது. விவசாயிகள் நலன்களை கவனத்தில் கொண்டு இலங்கையின் பாரிய களஞ்சிய தொகுதி ஒன்றும் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நாளை மாஹோ - -ஓமந்தை தொடருந்து மார்க்கத்தினை திறந்து வைக்க உள்ளோம். அத்துடன் மஹோ முதல் அனுராதபுரம் வரையிலான பகுதிக்கான சமிக்ஞை தொகுதிகள் நிர்மாண பணிகளும் ஆரம்பித்து வைக்கப்படும். இவ்வாறான திட்டங்களின் தொடர்ச்சியாக காங்கேசன்துறை துறைமுகத்தின் நவீன மயமாக்கல் பணிகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

அது மட்டுமல்லாமல் இலங்கையில் உள்ள இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்காக 10,000 வீடுகளின் நிர்மாண பணிகள் விரைவில் பூர்த்தி அடைய உள்ளன. இந்தியாவால் வழங்கப்படுகின்ற திறன் விருத்தி திட்டங்களில் மேலதிகமாக 700 இலங்கை அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறை சார்ந்த அதிகாரிகள், தொழில்முயற்சியாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இளம் தலைவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் இவ்வாறான பயிற்சித் திட்டங்களுக்காக உள்வாங்கப்படுவார்கள்.

பொதுவான பாதுகாப்பு நலன்களை கொண்டவர்களாக நாங்கள் உள்ளோம் என நாம் நம்புகிறோம். இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பானது ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதுடன் பரஸ்பரம் இரு நாடுகளிலும் தங்கியுள்ளது.

இந்தியாவின் நலன்கள் குறித்த அவரது உணர்வுக்காக ஜனாதிபதி திசாநாயக்க அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். பாதுகாப்பு, ஒத்துழைப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான உடன்படிக்கையினை நாம் வரவேற்கின்றோம். அதேபோல கொழும்பு பாதுகாப்புகுழுமம்மற்றும்இந்துசமுத்திரத்தின் பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டம் ஆகியவை குறித்து ஒன்றிணைந்து செயல்படுவதற்கு நாங்கள் இணங்கியுள்ளோம்.

இந்தியாவுக்குஇலங்கைக்கும்இடையில் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த ஆன்மீக உறவு காணப்படுகின்றது. எனது சொந்த மாநிலமான குஜராத்தில் உள்ள ஆரவல்லியில் 1960 ஆம் ஆண்டில் மீட்கப்பட்ட புத்த பெருமானின் புனித தாது பொருட்கள் இலங்கையில் மக்கள் தரிசனத்திற்கு காட்சிப்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன என்பதனை நாம் மகிழ்வுடன் அறிய தருகின்றோம்.

திருகோணமலையில், உள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்படுவதற்கு இந்தியா உதவிகளை வழங்கும். அதேபோல நுவரெலியா சீதை அம்மன் ஆலயம் மற்றும் அனுராதபுரம் மஹா போதி விகாரை வளாகத்தின் புனித நகர் நிர்மாணம் ஆகியவற்றுக்கும் இந்தியா ஆதரவினை வழங்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் அறிய தருகின்றேன்.

மீனவர்களின் வாழ்வாதாரம் குறித்தும் நாம் கலந்துரையாடினோம். இந்த விவகாரத்தில் மனிதாபிமான அடிப்படையில் அணுகுமுறை முன்னெடுக்கப்படவேண்டும் என்பதனை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அதேபோல சிறைச்சாலைகளில் உள்ள மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகள் உடனடியாகவிடுவிக்கப்படவேண்டுமெனவும் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அனைவரையும்உள்ளடக்கியஅணுகுமுறை குறித்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க எனக்கு தெரிவித்திருந்தார். அத்துடன் இலங்கை அரசு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்றும் இலங்கை அரசமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான வாக்குறுதியை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கு இடையிலான உறவுகள் பரஸ்பர நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டவை ஆகும். நமது மக்களின் நம்பிக்கைகள் மற்றும் அபிலாசைகளை பூர்த்திசெய்வதற்கு தொடர்ந்து ஒன்றிணைந்து பணியாற்றுவோம். அன்பான வரவேற்புக்காக ஜனாதிபதி திசாநாயக்வுக்கு மீண்டும் ஒருமுறை எனது இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் எமது பங்குடமையை புதிய உயரத்திற்கு கொண்டுசெல்ல முடியுமென நான் நம்புகிறேன்.

## சஜித்தையும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு இந்தியப் பிரதமர் முன்னிலையில் தெரிவித்தார்.

மேலும், இந்தியா- இலங்கை நட்புறவை வலுவான அடித்தளமாகப் பேணுவதுடன், இரு நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் இலக்குகளை நிறைவு செய்து கொண்டு, இறையாண்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன்செயற்படுமாறும்எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

அவ்வாறே, எமது நாடு வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார மந்தநிலையிலிருந்து மீளுவதற்கு மேலும் தேவையான ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கில் எமது நிலத்தை மீட்டுத் தாருங்கள் ஆளுநரிடம் வலியுறுத்திய மனு கையளிப்பு

(ஹஸ்பர்)

கிழக்கில் தமது நிலத்தை மீட்டுத் தருமாறு கோரி கண்டன ஆர்ப்பாட்டமும் ஆளுநருக்கு மகஜர் கையளிப்பும் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பாதிக்கப்பட்டுள்ள சம்பூர் மேற்கு, சம்பூர் கிழக்கு மற்றும் கடற்கரைச்சேனை கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட நிலமீட்பிற்கான வலையமைப்பு, திருகோணமலை, இலங்கை என்ற பெயரில் தெரிவிக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்த சம்பூர் பிரதேசத்தில் இலங்கை அரச பொறிமுறைகளால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை விடுவித்து ஜீவனோபாயத்தை முன்னெடுக்க உதவுங்கள்.

இலங்கையின் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சம்பூர் மேற்கு, சம்பூர் கிழக்கு மற்றும் கடற்கரைச்சேனை கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களாகிய நாங்கள் 04.04.2025 வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு முன்னாள் ஜனநாயக முறையில் ஒன்று கூடிய நாங்கள் இலங்கை அரச பொறிமுறைகளால் கையகப்படுத்தப்பட்ட எமக்கு சொந்தமான 1658 ஏக்கர் 04 றூட் 35.38 பேச் அளவுகளைக் கொண்ட எமக்கு சொந்தமான குடியிருப்பு மற்றும் தொழில் ஏக்கர் நிலங்களை முழுமையாக விடுவித்து நாம் வாழ்வதற்காகவும் ஜீவனோபாயத்தினை முன்னெடுக்கவும் உதவுமாறு கிழக்கு மாகாண ஆளுனர் அவர்களை வேண்டுகின்றோம்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி தலைமையின் கீழ், வரலாற்றில் முதல் முறையாக, தேசிய மக்கள் சக்தி அமைத்த அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. இன்று எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு நீடித்த தீர்வுகளை வழங்க தற்போதைய அரசாங்கம் அதிகாரம் கொண்டுள்ளது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

அந்த வகையில் கடந்த 2006 ஆம் ஆண்டு இலங்கையின் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற பாரிய யுத்தமானது எமது மேற்கூறப்பட்டுள்ள பிரதேசத்திலுள்ள அனைத்து மக்களையும் இடம்பெயரச் செய்ததுடன், சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்களையும் பெரிதும் பாதித்திருந்தமை தாங்கள் அறிவீர்கள்.

அந்த வகையில் மேற்படி சம்பூர் பிரதேசத்திலுள்ள நாங்கள் கடந்த 2006 ஆண்டு எமது பிரதேசத்தினை விட்டு இடம்பெயர்ந்து இலங்கையின் பல மாவட்டங்களிலுள்ள நலன்புரி நிலையங்களிலும் இந்தியா போன்ற நாடுகளில் அகதி முகாம்களிலும் இடம் பெயர்ந்த நிலையில் அன்றைய அரசு( மஹிந்த ராஜபக்ஷ அரச) நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு முரணான முறையில் எமக்கு சொந்தமான 1311 ஏக்கர் 4 றூட் 35.38 பேச் இற்கும் மேற்பட்ட காணிகளை 1499ஃ25 இலக்க 2007.05.30ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் உயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தி அரசுடைமையாக்கியது.

அதன் பின்னர் உயர் பாதுகாப்பு வலயமென 1499ஃ25 இலக்க 2007.05.30 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசுடைமையாக்கிய சம்பூர் பிரதேச மக்களுக்கு சொந்தமான குடியிருப்பு மற்றும் தொழில் காணிகளில் 818 ஏக்கர் 02றூம் 35.38 பேச் காணிகளை 1758ஃ26 இலக்க 2012.05.17 ஆம் திகதி இலங்கை சோசலிச சனநாயக குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை அரசாங்க அறிவித்தல் 1978 ஆம் 04ம் இலக்க முதலீட்டுச் சபை சட்டம் 22 அ பிரிவின் கீழான கட்டளையின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய கனரகத் தொழிலுக்கான ஒரு விசேட வலயமென முதலீட்டு சபைக்கு முன்னாள் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் கையொப்பம் இட்டு வழங்கப்பட்டது.

இருந்த போதும் கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரச முதலீட்டு சபைச் சட்டத்தின் ஊடாக அறிவித்து கனரக தொழிலுக்காக விசேட வலயத்திற்காக வழங்கப்பட்ட 818 ஏக்கர் 02றூம் 35.38 பேச்காணிகளும் இலக்கம் 1913ஃ19



கொண்ட 2015.05.07 ம் திகதி வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் ஊடாக ரத்து செய்யப்பட்டு இடம்பெயர்ந்த மக்களை 02 தடவைகளில்(19.08.2025, 25.03.2026) குடியேற்றியது.

அதுமாத்திரமின்றி உரிய பிரதேச மக்களாகிய நாங்கள் இடம்பெயர்ந்த நிலையில் எங்களுக்கு சொந்தமான தொழில் காணிகளும் ஒருபகுதி குடியிருப்புக் காணிகளுமாக 603 ஏக்கர் 02 றூட் அளவு கொண்ட காணிகள் (அனல் மின் நிலையத்திற்கு 505 ஏக்கர்.மின்சார சபைக்கு 40 ஏக்கர் மற்றும் நிலக்கரி மற்றும் நீர் கொண்டு செல்வதற்கான வீதிக்கெனப் பெறப்பட்ட 58 ஏக்கர் 02 றூட் காணிகள் இதில் அடங்குகின்றது) எந்த விதமான சட்ட ஒழுங்குகளும் இன்றி அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகளுக்காக அரசால் எடுக்கப்பட்டது.

அதுமாத்திரமின்றி சம்பூர் மக்கள் 02ஆம் கட்டமாக குடியேற்றப்படவிருந்த மக்களது 176 ஏக்கர் குடியிருப்புக் காணிகளில் இலங்கை கடற்படை முகாமிட்டு இருந்தது. இந்நிலையில் கடற்படையினரால் தாங்கள் மக்களின் காணிகளில் இருந்து வெளியேறுவதாக இருந்தால் மாற்றுக்காணிகள் தேவை என கடற்படையினரால் கோரப்பட்டதற்கு அமைவாக சம்பூர் பிரதேசத்திலுள்ள 12 குடும்பங்களுக்கு சொந்தமான 16 ஏக்கர் காணிகள் மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கடற்படைக்கு வழங்கப்பட்டது.

கடற்படையினருக்கு 16 ஏக்கர் மாத்திரம் வழங்கப்பட்ட நிலையில், இக்காணிகளுக்குள் முகாம் அமைத்த கடற்படையினர் தற்போது சம்பூரிலுள்ள 110 குடும்பங்களுக்குச் சொந்தமான 207.52 ஏக்கர் காணிகள் மேலும் எந்தவிதமான சட்ட ஒழுங்குகளுக்கும் அமையாஜ ¬மல் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சம்பூர் மேற்கு, சம்பூர் கிழக்கு மற்றும் கடற்கரைச்சேனை ஆகிய கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு சொந்தமான குடியிருப்பு மற்றும் தொழில்கள் காணிகள் அரச வர்த்தகமானிப் பத்திரிகை மூலமும் அரச உடைமையாக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய அரச திணைக்களங்கள், சபைகள் மற்றும் அரச படைகளுக்கு வழங்கப்பட்டும் உள்ளது.

இந்நிலையில் நாங்கள் இடம்பெயர்ந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை(19 ஆண்டு காலமாக) இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரச தலைவர்களிடம் பல தடவைகள் எமது குடியிருப்பு மற்றும் ஜீவனோபாயத்திற்குரிய மேற்படி அளவுகளைக் கொண்ட காணிகளை மீள எமக்கு வழங்குமாறு கோரிக்கைகளை வழங்கி இருந்தோம்.

ஆனால் இற்றைக்கு 19 வருட காலமாகியும் எமக்கு சொந்தமான 1658 ஏக்கர் 04 றூட் 35.38 பேச் அளவுகளைக் கொண்ட குடியிருப்பு மற்றும் ஜீவநோபாயக் காணிகளில் 818 ஏக்கர் 02 றூட் 35.38 பேச் அளவு கொண்ட காணிகள் இன்னும் மீள்பாராதீனம் செய்யப்படாமல் இன்று வரைக்கும் 1499ஃ25 இலக்க 2007.05.30ம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரச உடைமையாகவே இருக்கின்றது.

அதே போன்று அனல் மின்நிலையத்திற்கு அரசால் பெறப்பட்ட 603 ஏக்கர் 02 றூட் காணிகளும் மற்றும் இலங்கை கடற்படையினரால் பெறப்பட்டுள்ள எமக்கு சொந்தமான 207.52 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்படாமலே இருக்கின்றது.

இதனால் மேற்படி 03 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்களின் இயல்பான வாழ்க்கை






பாதிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பாக 818 ஏக்கர் 2றூட் 35.38 பேச் அளவுகள் கொண்ட காணிகளில் நாம் மீள் குடியேற்றப்பட்டிருந்த போதும் நாம் காணிக்கு உரித்துடமை இல்லாதவர்களாகவும் 1499ஃ25 இலக்க 2007.05.30 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எமது காணி ஆவணங்கள் செல்லுபடியற்றதாகவும் காணப்படுவதால் பல பிரச்சினைகளுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாக்கப்பட்டு இருக்கின்றோம்.

அத்துடன் அனல் மின் நிலையம் மற்றும் சம்பூர் விதுர கடற்படையினரால் பெறப்பட்டுள்ள எமக்கு சொந்தமான ஜீவனோபாயத் தொழில்களை மேற்கொள்ளும் காணிகளும் விடுவிக்கப்படாத நிலையில் நாம் தொழில்களை மேற்கொள்வதற்கான நிலம் இல்லாமல் இருப்பதனால் வறுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், எமது குடும்பங்களில் இயல்பான வாழ்க்கையும் அற்றுப்போன நிலையிலேயே வாழுகின்றோம்.

எனவே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசானது வடக்கிலும் கிழக்கிலும் குறிப்பிட்டளவு காணிகளை மக்களிடம் வழங்கி வருவதாக நாம் ஊடகங்கள் ஊடாக தெரிந்து கொள்கின்றோம்.

எனவே எமக்கு சொந்தமான காணிகளையும் தேசிய மக்கள் சக்தி அரசானது விடுவிக்கும் என்ற அதீத நம்பிக்கையுடன் கீழ் குறிப்பிடப்படும் கோரிக்கைகளை தங்களுக்கு முன்வைக்கின்றோம்.

எமது கோரிக்கைகள்:-

01. 1499ஃ25 இலக்க 2007.05.30ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அரசுடைமையாக்கப்பட்ட 818 ஏக்கர் ,

02 றூட் 35.38 பேச் மக்களின் இவ் அளவு கொண்ட காணிகள் காணி சுவீகரிப்பு சட்ட இல 39ஃ1 இன் கீழ் மீள்பாராதீனம் செய்யப்பட்டு மீளவும் மக்களுக்கு உரித்தாக்குமாறு வேண்டுகின்றோம்.

02. அனல் மின் நிலையத்திற்காக அரசால் பெறப்பட்ட 603 ஏக்கர் 02 றூட் காணிகளில் மேற்படி 03 கிராம சேவகர் பிரிவிலுள்ள குடியிருப்பு மற்றும் விவசாய தொழில் நடவடிக்கைக்கான மக்களின் 308 ஏக்கர் 02 றூட் அளவு கொண்ட காணிகளையும் இவ்விவசாயத்திற்கான நீர் வழங்குகின்ற 05 விவசாயக் குளங்களையும் விடுவித்து எமது ஜீவனோபாயத்தினை வழங்கி உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்துமாறும் சேண்டுகின்றோம்.

03.சம்பூரின் வடக்கு பக்கமாகவுள்ள சம்பூர் மக்களுக்கு சொந்தமான காணிகள் இலங்கை காணி சுபீகரிப்பு சட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் இலங்கை கடற்படையினரால் பலார்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 108 குடும்பங்களுக்கு சொந்தமான 207 ஏக்கர் குடியிருப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கான காணிகளை விடுவித்து தருமாறு வேண்டுகின்றோம். - என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுடும் உண்மை

**இந்தியாவைக் கடக்க வேண்டிய இடம்நோக்கி ஈழத் தமிழ்த் தலைமைகள் நகரவேண்டியதை மோடியின் நான்காவது பயணம் உணர்த்தும் என்பதை நேற்று 'காலைக்கதிர்' ஆணித்தரமாகத் தெரிவித்திருந்தது.**

**இந்தியத் தலைமை அமைச்சர் (பிரதமர்) மோடியின் வருகையையொட்டிய காட்சிகளும் ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு, உரிமைகள் தொடர்பில் அவரது பிரதிபலிப்புக்களும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனான அவரது சந்திப்புக்களும் இதனை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றன. தமிழர் விடயத்தில் இந்திய அணுகுமுறையும் நிலைப்பாடும் வழக்கத்திற்கு மாறாக எந்தவொ–ரு மாற்றத்தையும் பிரதிபலிக்கவில்லை.**

**"இலங்கை அரசு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்றும் இலங்கை அரசமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான வாக்குறுதியை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம்'' என்பதுதான் மோடியின் ஈழத் தமிழர் அரசியல் தீர்வு குறித்த பிரதிபலிப்பு. இது வழமையான ஒன்றுதான். போர் முடிந்த பின்னர் கடந்த பல வருடங்களாக இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் இந்த வசனங்களைத்தான் சம்பிரதாயபூர்வமாக வெளிப்படுத்தி வருகின்றது. அதேநேரம் கொழும்புடனும் பௌத்தத்துடனும் அது தனது நெருக்கத்தை மேலும் மேலும் அதிகரித்துச் செல்கின்றது. அதனை இந்தியப்பிரதமருக்கு இலங்கையின் அதியுயர் விருதை வழங்கியதன் மூலம் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க வெளிப்படுத்தியிருக்கிறார். மோடியும் அதனை மிக்க மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.**

**அதாவது இந்திய – ஈழத் தமிழர் உறவு கடந்த 30 வருடங்களாக ஒரே நேர் கோட்டில் பயணிக்கும்போது சிங்கள பௌத்த – இந்திய உறவு மிக நெருக்கமானதாக மாறி வருகின்றது. இதில் இந்தியா பக்கம் தவறிருப்பதாகச் சொல்வதற்கும் இல்லை. இந்தியா தன் நலன்சார்ந்து, தன் வளர்ச்சி சார்ந்து சிந்திக்கிறது. தனக்கு எது தேவையோ அதனைச் செய்கின்றது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதைத் தவறென்று யாரும் சொல்லமுடியாது. அதைப் புரிந்துகொள்ளாது இந்தியாவே ஈழத் தமிழர்களின் மீட்பர் என்று நம்பிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அந்தக் காலங்கள் கடந்துபோய் பல தசாப்தங்கள் ஆகிவிட்டன என்பதையும், அதற்கு ஈழத் தமிழர்களுமே காரணம் என்பதையும் புரிந்துகொள்வது அவசியம்.**

**கடந்த 15 வருடங்களாக இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான அரசியல் உறவுகளில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்புக்களில் தமிழர் தரப்பினரின் கோரிக்கைகளும் மாறியதில்லை, இந்தியாவின் வார்த்தைகளும் மாறியதில்லை. இந்தியப் பிரதமரின் இந்தப் பயணத்திலும் அதுவேதான் நடந்துள்ளது. அதில் மாற்றம் எதுவுமில்லை.**

**இதைச் சரியாகப் புரிந்துகொண்டு ஈழத் தமிழர் நலன்நோக்கி அரசியல் செயற்பாடுகள் மற்றும் உத்திகள் சார்ந்து இனியாவது தமிழ்த் தலைவர்கள் சிந்திக்கவும் தொழிற்படவும் வழிபார்க்கவேண்டும்.**

## காலி தல்கஸ்வல தமிழ்ப் பாடசாலையின் மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி

(சியாஜ்)

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் காலி தல்கஸ்வல தமிழ் கனிஷ்ட வித்தியாலயத்தின் தரம் 09 இற்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி ஒன்று பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவற்றுப் பணிப்பாளர் அன்டனி ஜேசுதாஸன் மற்றும் மாத்தறை ஹுளந்தாவ தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் எஸ். சதாசிவம் ஆகியோர் இத்தலைமைத்துவ பயிற்சியின் வளவாளர்களாக கடமையாற்றியதோடு பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் திட்ட பணிப்பாளர் லவீனா ஹசன்தி, மாவட்ட இணைப்பாளர் ஆ. ஜெஸ்மன் மற்றும் காலி மாவட்ட இளைஞர் அமைப்பின் தலைவர் கவிஸ்க ஆகியோர் வசதியளிப்பவர்களாக செயற்பட்டனர்.

இப் பயிற்சியின் மூலம் மாணவர்கள் தங்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கும், தங்களை மிக ஆழமாக ஆராய்வதற்கும் முற்பட்டனர். அதேவேளை தனது பாடசாலை மற்றும் சமூகத்துக்காக தலைமைத்துவத்தை வழங்குவதன் முக்கயத்துவத்தை தமது அனுபவங்களின் ஊடாக பகிர்ந்துக் கொண்டனர்.

இந்த பயிற்சிக்கான நிதி உதவியினை வி.ஐ.ஆர்.ஐ டி.டி எச்.ஐ., யூ.எண்.ஓ.பீ.எஸ் மற்றும் ஆஸ்திரேலியா எயிட் ஆகிய நிறுவனங்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## திருட்டு சந்தேகநபர்கள் இருவர் பெரியநீலாவணையில் கைது

(பாறுக் ஷிஹான்)

வீடு மற்றும் மாடுகள் உட்பட வர்த்தக நிலையங்களில் சூட்சுமமாக களவாடி வந்த கொள்ளையர் குழுவின் இரு சந்தேக நபர்களை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பாண்டிருப்பு உள்ளிட்ட புற நகர் பகுதிகளில் வீடுகள் உடைக்கப்பட்டும் மாடுகள் உட்பட பெறுமதியான பல பொருள்கள் களவாடிச் செல்லப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய வெள்ளிக்கிழமை அதிகாலை குறித்த கொள்ளை குழுவில் உள்ள 2 சந்தேக நபர்கள் சிசிடிவி காணொளி மற்றும் பொதுமக்களின் தகவல்களின் அடிப்படையிலும் பெரிய நீலாவணை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பதுடன் சுமார் 25 வயது முதல் 28 வயது மதிக்கத்தக்கவர்களாவர். ஏனைய கொள்ளைக் குழுவில் உள்ள மூவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பெரிய நீலாவணை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட கொள்ளையர் குழு சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து களவாடி செல்லப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் 5 இற்கும் அதிகமானவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஏனைய களவாடப்பட்ட பல பொருள்களும் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார் வழிநடத்தலில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தலைமையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடி நகர சபையின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு





(நூருல்ஹுதா உமர்)

காத்தான்குடி நகர சபையில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் உட்பட முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் கட்சி மற்றும் சில சுயேச்சை குழுக்களில் போட்டியிடும் வேட்பாளர்களை ஒருமித்து அறிமுக நிகழ்வும் பொதுக்கூட்டமும் காத்தான்குடி அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் காத்தான்குடி நகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

காத்தான்குடி நகர சபை 10 வட்டார உறுப்பினர்களையும் 9 போனஸ் உறுப்பினர்கள் அடங்கலாக 19 உறுப்பினர்களை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தொற்றா நோய்ப் பரிசோதனை சாய்ந்தமருதில் முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)



சாய்ந்தமருது பிரதேசத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கு தொற்றா நோய்ப் பரிசோதனை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சஹீலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர்.ஜே. மதன் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேசத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கு தொற்றா நோய்ப் பரிசோதனை சாய்ந்தமருது ஜும்மா பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது 153இற்கு மேற்பட்டவர்களுக்கு குருதிச் சீனி பரிசோதனை மற்றும் ஆரோக்கிய வாழ்வுக்கான ஆலோசனைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரீன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்களும் கலந்து கொண்டனர்.



# திருகோணமலை பத்திரகாளியின் 4 ஆம் நாள் நிகழ்வு

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை பத்திரகாளி தேவஸ்தான பிரம்மோற்சவ பெருந்திருவிழாவின் நான்காம் நாள் வெள்ளிக்கிழமை இரவு 7.30 - 8.30 மணிக்கு பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் 'ஐந்தொழில் தத்துவம்' என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றினார்.








# தேவையான அளவு அரசி உண்டு வாங்க வர்த்தகர்கள் தயாரில்லை

## வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

அரிசி ஆலைகளில் நாட்டிற்குத் தேவையான அரிசி உள்ள போதும் வர்த்தகர்கள் குறைந்த இலாபத்தில் அதனை கொள்வனவு செய்து விற்பதற்குத் தயாராக இல்லை என வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்க தலைவர் சி.விவேகானந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிறுபோக நெல் வரும் வரை மக்களுக்குத் தேவையான அரிசியை வழங்குவதற்கு நெல் இருக்கின்றது. அரிசி ஆலைகளிலும், பொருளாதாரம் உள்ள தனியார் கொள்வனவு செய்து வைத்துள்ள நெல்லும் உள்ளது. அதிகூடிய விலையில் விற்பதற்காக அவர்கள் வைத்துள்ளார்கள். அரிசி ஆலை உரிமையாளர்களைப் பொறுத்த வரை அரச கட்டளைக்கு உடன்பட்டு அரசின் விலை நிர்ணயத்திற்கு கொடுப்பதற்கு தாராளமான அரிசி இருக்கிறது. ஆனால் அரிசி தட்டுப்பாடு. வெளிநாட்டில் இருந்து இறக்கப் போவதாக கூறுகிறார்கள்.

முதல் இருந்த அரசாங்கம் அரிசியில் கொமிசன் எடுத்துள்ளார்கள். இது நல்லாட்சி செய்யும் அரசு. எல்லா இடங்களிலும் உள்ள நெல்லினை கணக்கெடுத்து சந்தைப் படுத்துவதற்குரிய உதவியையும் அதற்குரிய பொறிமுறையையும் செய்ய வேண்டும். எம்மிடம் தற்போது போதிய அரிசி இருக்கிறது. வாக்குவதற்கு வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தயாரில்லை.

முன்னைய காலத்தில் ஒரு கிலோ அரிசிக்கு 20:30 ரூபா இலாபம் வைத்து விற்பனை செய்த சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள் தற்போது அரசாங்கத்தால் கூறப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் இருந்து 5 ரூபா குறைத்து வழங்குமாறு கூறப்பட்டதற்கு இணங்க நாம் விநியோகிக்கின்ற போது அவர்கள் இலாபம் போதாது என கொள்வனவு செய்கிறார்கள் இல்லை. வெள்ளை நாடு 230 ரூபா அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட விலை. நாங்கள் 225 ரூபாவிற்கு கொடுக்க தயாராக இருக்கின்றோம். சிவப்பு நாடு 230 ரூபா. அதையும் 225 கொடுக்க தயார். அதை வாங்க முதலாளிமாரும் இல்லை. வத்தக நிலையம், சதொச, கூட்டுறவுச் சங்கம் என எவையும் இல்லை.

ஆனால் அரிசி இல்லை. அரிசி தட்டுப்பாடு எனக் கூறுகிறார்கள். வங்கியில் கடன் எடுத்து நெல் கொள்வனவு செய்தோம். அந்த கடனை 6 மாதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். அதனால் அரிசியை விற்க வேண்டும். அடுத்த சிறுபோக நெல் வருகிறது. இதை விற்றால் தான் சிறுபோக நெல்லை கொள்வனவு செய்ய முடியும். இதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் தற்போது அரிசி தட்டுப்பாடு இல்லை. குளங்களில் நிறைய தண்ணீர் இருக்கிறது. சிறுபோக நெல் வந்தால் இந்த வருடத்திற்கே அரிசி தட்டுப்பாடு இருக்காது. இதனை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். அரிசி இருக்கிறது. அதை வாங்க வர்த்தக நிலையங்கள் தயார் இல்லை. அரச கட்டுப்பாட்டு விலையில் கொள்வனவு செய்து நெல்லை குற்றி கட்டுபாட்டு விலைக்கு அரிசியை கொடுக்க கூடியதாக உள்ளது. அதை நாம் செய்கின்றோம். வர்த்தக நிலைய உரிமையாளர்கள் முன்னைய காலம் போல் அரிசியில் அதிக இலாபம் பார்ப்பதால் கொள்வனவு செய்கிறார்கள் இல்லை. தென்னிலங்கையில் இருந்து வரும் அரிசியை கடைக்குள் ஒளித்து வைத்து 360 ரூபாவுக்கு விற்கிறார்கள். ஆனால் எமது மாவட்டத்தில் உள்ள தேவையான அரிசியை வாங்கிறார்கள் இல்லை. ஆகவே, அரசாங்கம் இதனை ஒரு பொறிமுறைக்குள் கொண்டு வர வேண்டும். - என்றார். 100

JOB VACANCY

1. Full Time Job

REQUIRED POSITIONS:

·Advertisement collector – 2

·Marketing Head – 1

·Receptionist – 2

SALARY - ON INTERVIEW.

2. மண்டதீவில் உள்ள சுற்றுலா தலம் ஒன்றிற்கு இரண்டு வேலையாள் தேவை

தங்கியிருந்து வேலை செய்வது விரும்பத்தக்கது.

சம்பளம் - நேர்காணலில், பேசி தீர்மானிக்கலாம்

SEND YOUR CV TO :

hr.goodgift@gmail.com

More Details

0775551442



# ஆர்ப்பாட்டத்திற்கு நேற்று கொழும்பில் தடை உத்தரவு

கொழும்பில் நேற்று (சனிக்கிழமை) முன்னணி சோசலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ, புபுது ஜயகொட உள்ளிட்ட தரப்பினர் நடத்த திட்டமிடப்பட்டதாகக் கூறப்படும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் சமர்ப்பணங்களை முன்வைத்து தடை உத்தரவைப் பெற்றுள்ளனர்.

கொழும்பு கோட்டை மற்றும் காலி முகத்திடல் பகுதிகளுக்குள் அதன் உறுப்பினர்கள் நுழைவதைத் தடை செய்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மக்கள் புறக்கணித்தவர்களை இந்தியப் பிரதமர் சந்திக்கக்கூடாது

## கிளிநொச்சியில் தனிநபர்

தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களை இந்தியப்பிரதமர் சந்திக்க கூடாது என வலியுறுத்தி தமிழரசுக்கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர். சண்முகராசா ஜீவராசா நேற்றைய தினம் கிளிநொச்சி பஸ் நிலையம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தார். வீதியால் சென்ற மக்களுக்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்கியிருந்தார். 316







தமிழ் மக்கள் புறக்கணித்தவர்களை இந்தியப் பிரதமர் சந்திக்கக்கூடாது

கிளிநொச்சியில் தனிநபர்

தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களை இந்தியப்பிரதமர் சந்திக்க கூடாது என வலியுறுத்தி தமிழரசுக்கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர். சண்முகராசா ஜீவராசா நேற்றைய தினம் கிளிநொச்சி பஸ் நிலையம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தார். வீதியால் சென்ற மக்களுக்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்கியிருந்தார். 316

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்திய பிரதமரிடம் முன்வைக்கவேண்டிய கோரிக்கை கல்முனையில் பாதாகையாக

(பாறுக் ஷிஹான்)

அனைத்து தமிழ் தேசிய அரசியல் தலைமைகளும் இந்திய பிரதமரிடம் ஏகோபித்த முறையில் முன்வைக்கவேண்டிய கோரிக்கை குறித்து பல்வேறு இடங்களில் பதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.




அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு உட்பட கல்முனை பகுதியில் இவ்வாறு பதாதைகள் தொங்க விடப்பட்டுள்ளன என எமது செய்தியாளர் பாறுக் ஷிஹான் தெரிவித்தார்.

காரைதீவு சந்தி மற்றும் கல்முனை பிரதான பஸ் நிலையத்திலும் இவ்வாறு குறித்த பதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

இப்பதாதையில்'இலங்கையின் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீள பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வுக்கு இந்திய அரசின் உயரிய ஒத்துழைப்பை வழங்கவேண்டும்' என குறிப்பிட்டு வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு - இலங்கை 04 சித்திரை 2025 என எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஸ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை ஏற்படுத்த இந்திய அரசு உயரிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய பிரதமரிடம் வழியுறுத்தக் கோரி வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வெள்ளிக்கிழமை அவசர மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் இணை இணைப்பாளர் யே.யாட்சன் பிகிறாடோ தலைமையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குறித்த மனு கையளிக்கப்பட்டது.

குறித்த மனுவில் மேலும் குறிப்பிடுகையில்-

'தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைமைத்துவங்களிடமும் அக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவாகிய நாம் பகிரங்க கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இதுவரை காலமும் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கப் பெறவில்லை. இதற்கு பிரதான காரணம் தமிழ் அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்வு குறித்த ஏகோபித்த உடன்பாடு காணப்படாமையும் ஐக்கியமின்மையுமே காரணமாகும்.

இந்நிலையில் தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் இந்திய பிரதமரை நேரடியாக சந்திப்பதற்கு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

மீளப்பெறமுடியாதசமஸ்டி முறையிலான அரசியல் தீர்வே நிரந்தரமான தீர்வாக அமையுமென தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வலியுறுத்துகின்றார்கள்.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதனை மறுதலிக்கமுடியாது.

எனவே தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் அனைவரும் ஏகோபித்த குரலில் ஒரே கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றோம். - என்றுள்ளது.

# குருமன்காட்டில் பஸ் நிலையம் நகர சபையால் அகற்றப்பட்டது

வவுனியா குருமன்காடு பகுதியில் பயன்பாடற்ற நிலையில் காணப்படிருந்த பஸ் நிலையம் நேற்று நகரசபையால் அகற்றப்பட்டது.

குறித்த பஸ் நிலையம் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டமையால் அதனை அகற்றுமாறு நகரசபைக்கு பல்வேறு தரப்புகளிலிருந்தும் முறைப்பாடுகள் வழங்கப் பட்டன.

இதனையடுத்து நேற்றைய தினம் நகரசபையால் குறித்த தரிப்பிடம் இடித்து அகற்றப் பட்டுள்ளது.

குறித்த பகுதியில் புதிய பஸ் நிலையம் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஒரு பிடி மண் – விவசாய நிலத்துக்கு' என்ற தொனிப்பொருளில் சந்தைநாள் நிகழ்வு

## காரைதீவில் நடந்தது

(ஸாகிர்)



'விவசாய ஊக்குவிப்பு செயற்றிட்டத்திற்கு அமைவாக, அம்பாறை பிரதி விவசாயப் பணிப்பாளர் அதிகார பிரதேசங்களில், ஒரு பிடி மண்-விவசாய நிலத்துக்கு' வளமான சிறுபோகம் வளமான எதிர்காலம் - 2025 எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட, விவசாய உற்பத்தி முயற்சியாளர்களை ஒன்றிணைக்கும் சந்தை நாள் நிகழ்வு காரைதீவு விவசாய விரிவாக்கல் அலுவலகத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் காரியாலயத்தில் பணிபுரியும் மகளிர் விவசாய விரிவாக்கல் பிரிவின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் (மாகாண இடை) கலாநிதி கே.ஏ.கே.எஸ் லக்மால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் திகாமடுல்ல மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், நிந்தவூர் வலய உதவி விவசாயப் பணிப்பாளர் ருக்மன் சோமரத்ன, சம்மாந்துறை, தம்பிலுவில், அட்டாளைச்சேனை வலயங்களுக்கான உதவி விவசாயப் பணிப்பாளர்கள், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜீவராணி சிவசுப்பிரமணியம், காரைதீவு விவசாய விரிவாக்கல் நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி பி. பிரதீப் மற்றும் அம்பாறை மாவட்ட மகளிர் விவசாய விரிவாக்கல் பாடவிதான உத்தியோகத்தர் திருமதி ஜீவிதா சிந்தூரியன் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் மற்றும் கமநல சேவை உத்தியோகத்தர் கரையோர விவசாய விரிவாக்கல் நிலையங்களுக்கு உட்பட்ட விவசாய உற்பத்தி முயற்சியாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கலந்து கொண்ட விவசாய உற்பத்தி முயற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தேங்காய் உற்பத்தியானது எதிர்வரும் நாள்களில் குறைவடையுமாம்

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

இலங்கையில் தேங்காய் உற்பத்தியானது எதிர்வரும் நாள்களில் குறைவடையும் என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேங்காய் உற்பத்தி பாதித்து வருவது தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிவிக்கையில் இதனை சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில் –

இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேங்காய் உற்பத்தியில் பெரும் சரிவை ஏற்படுத்தி வரும் பிரதான காரணிகளில் தென்னை மரங்களில் பரவி வருகின்ற வெள்ளை ஈக்களின் தாக்கமும் ஒன்றாக உள்ளது.

ஆனால் இந்த வெள்ளை ஈக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதுவரையில் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமல் அசமந்தமாக உள்ளது.

இலங்கையில் தமிழ் – சிங்கள மக்களின் உணவிலும், பண்பாட்டிலும் பிரதான இடத்தைப் பிடித்திருக்கின்ற தேங்காய்கள் ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்குக் கணிசமான அந்நிய செலாவணியையும் ஈட்டித்தருகின்றன.

உற்பத்தியாகும் தேங்காய்கள் மூன்றில் இரண்டு பங்கு உள்ளூரில் நுகரப்பட மூன்றில் ஒருபாகம் உலர்ந்த தேங்காய்த் துருவல்களாகவும் தேங்காய் எண்ணெயாகவும் மதிப்புக் கூட்டி ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவற்றுக்கென ஆண்டுக்கு 4 பில்லியன் தேங்காய்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 3 பில்லியன் தேங்காய்கள் வரையிலேயே அறுவடை செய்யப்படுவதாகத் தெங்கு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தென்னையுடன் தொடர்புபட்ட இன்னுமொரு அமைப்பான தென்னை ஆராய்ச்சி நிறுவனம் அடுத்த 2026ஆம் ஆண்டில் சுமார் நூறு மில்லியன் தேங்காய்களுக்குப் பற்றாக்குறைவு ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறது.

பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்காகத் தேங்காய்ப்பால் உலர்ந்த தேங்காய்த் தூள், குளிர்ந்த தேங்காய்க்கூழ் ஆகியவனவற்றை இறக்குமதிசெய்ய அரசாங்கம் முடிவெடுத் திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

இதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது பொருளாதார ரீதியாகப் பிந்தங்கியுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற ஏழை எளிய மக்கள் தம் வீட்டு வளவுகளில் உள்ள தென்னைமரங்களை உணவாதாரமாகவும், வாழ்வாதாரமாகவும் பயன்படுத்திவந்த மக்கள் இன்று அம்மரங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் தேங்காயைச் சொட்டாகப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

பெருமெடுப்பில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை முன்னெடுத்து வரும் அரசாங்கம் குப்பை கூழங்களையும், சுவரொட்டிகளையும் அகற்றுவதோடு நிற்காமல் வெள்ளை ஈக்களை அகற்றித் தென்னையைச் சுத்தம் செய்வதையும் அத்திட்டத்தில் உள்வாங்கவேண்டும். விரைந்து செயற்படாவிடின் வீட்டினதும் நாட்டினதும் தெங்குப் பொருளாதாரம் மேன்மேலும் வீழ்ச்சியடையும் என்றும் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

## சஜித்தையும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய அமெரிக்கா குடியரசு எமது நாட்டின் ஏற்றுமதிக்கு விதித்துள்ள 44மூ பரஸ்பர வரி காரணமாக இந்நாட்டின் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கும், அதன் ஊழியர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் நிலைமைகளையும் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும்.

ஆகையால், இந்திய சந்தையில் எமது நாட்டின் ஆடைகள் உட்பட பிற உற்பத்திப் பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது இந்தியப் பிரதமரிடம் கோரியுள்ளார்.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்பு அவசியம் என்று தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு வந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில்நடைபெற்றது. இதில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்து அக்கட்சியின் தலைவர் சிவஞானம், பொதுச்செயலாளரும், ஊடகப்பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சாணக்கியன்ஆகியோரும்,ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் ஆகியோர் பற்கேற்றனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஏழு வருடங்களுக்கும் மேலாக நடத்தப்படாதிருக்கும் மாகாண சபைகளுக்கானதேர்தல்நடத்தப்படவேண்டும் என்று பிரதமர் மோடி பகிரங்கமாக வலியுறுத்தியமைக்காகஎமதுவரவேற்பையும் நன்றிகளையும் தெரிவித்தோம்.

13ஆவது திருத்தச் சட்டம் இதுவரையில் முழுமையாகநடைமுறைப்படுத்தபடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியதோடு குறித்த திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டலும் அது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான அதிகாரப் பகிர்வு உள்ளடக்கத்தை கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டோம். ஆகவே, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட்டு தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதற்குஇந்தியாவின்ஒத்துழைப்புதொடர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம்.

புதிய ஆட்சியிலும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை சுட்டிக்காட்டியதோடு உதாரணமாக குச்சவெளியில் சொற்ப அளவிலான பௌத்தர்களுக்காக 32இற்கும் மேற்பட்ட விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளதையும் பல இந்துக் கோவில்கள் விகாரைகளாக உருமாற்றம் செய்யப்படுவதையும் எடுத்துரைத்தோம்.

பொருளாதார நெருக்கடியான சூழலில் ஒட்டுமொத்த இலங்கைக்கு உதவிகளை வழங்கியமைக்காக நன்றிகளைத் தெரிவித்ததோடு, இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான வான்வழி, கடல்வழி இருதரப்பு தொடர்புகளை விரிவாக்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் கோரினோம்.

அத்துடன், வடக்கு,கிழக்கு மக்களுக்காக வீட்டுத் திட்டங்கள் உட்பட பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியாவுக்குநன்றிகளைத்தெரிவித்ததோடு, தொடர்ச்சியாக அம்மாகாணங்களின் அபிவிருத்திக்காக முதலீடுகளை இந்தியா மேற்கொள்ளவேண்டும்என்றும்கோரினோம்.

இந்திய, இலங்கை மீனவர்கள் விடயத்தில் பல்வேறு மட்டப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் சட்டவிரோதமான மீன்பிடி முறைமைகள் முற்றாக நிறுத்தப்படுவதன் ஊடாக இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கப்பட வேண்டும் என்றும் கோரினோம் என்றார்.

## இலங்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைதாங்குகிறார். முப்படைத்தளபதிகள் மிகக் குறுகிய காலத்தில் இந்த சிறப்பு நிவாரணக் குழுவை ஒழுங்குபடுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தேரவாத பௌத்தர்மத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் முக்கிய பங்கு வகித்த பௌத்த நாடான மியான்மார், அனர்த்த மற்றும் மனிதாபிமான உதவிகளை மட்டுமல்லாமல், மருத்துவ உதவி உள்ளிட்ட நிவாரண பொருட்களையும் பெற்று வருகிறது. இந்தப் நிவாரண பொருட்கள், மூன்று பௌத்த பீடங்களின் தலைமைத் தேரர்கள் தலைமையிலான, மகா சங்கத்தினரின் வழிகாட்டுதலின் கீழ், இலங்கை வாழ் மக்களிடமிருந்து நன்கொடையாக சேகரிக்கப்பட்டு, மியன்மார் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

வெளியுறவுஅமைச்சர்மற்றும்அமைச்சின் செயலாளர் தலைமையிலான வெளியுறவு அமைச்சு, இந்த பணிக்கான இராஜதந்திர ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பதில் முக்கிய பங்கு வகித்தது. இலங்கையின் தேசிய விமான நிறுவனமான ஸ்ரீ லங்கன் விமான சேவையும் இந்த மனிதாபிமான முயற்சிக்கு பங்களித்துள்ளது.

இந்தநடவடிக்கைகள், பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளுடன் சேர்ந்து, பிராந்திய ஒத்துழைப்பைவலுப்படுத்துவதற்கும்,நெருக்கடி காலங்களில் நட்பு நாடுகளுக்கு தேவையான ஆதரவை வழங்குவதற்கும் இலங்கையின் அர்ப்பணிப்பைஎடுத்துக்காட்டுவதாகஅமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைகள் மற்றும் நன்கொடை உதவிகள் தொடர்பில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றப்பட்டன.

புரிந்துணர்வுஒப்பந்தங்கள்பின்வருமாறு...

01. மின்சார இறக்குமதி/ஏற்றுமதிக்கான உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட (HDVC) இடை இணைப்பை செயல்படுத்துவதற்கான இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால மற் றும் இந்திய வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

02. டிஜிட்டல் பரிமாற்றத்திற்காக மக்கள் மட்டத்தில்செயல்படுத்தப்படும்வெற்றிகரமான டிஜிட்டல் தீர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீ தனபால மற்றும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

03. திருகோணமலையை வலுசக்தி மையமாகமேம்படுத்துவதில்ஒத்துழைப்புக்காக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால, இந்தியவெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் காலித் நசார் அலமேரி ஆகியோர் இந்தப் பரிமாற்றத்தை மேற்கொண்டனர்.

04. பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வுஒப்பந்தம்பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ்.சம்பத் துய்யகொந்த மற்றும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

05. இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சிற்கும் இலங்கை சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கும் இடையிலான சுகாதாரம் மற்றும் மருந்துத் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

06. மருந்து விதிமுறைகள் ஒத்துழைப்புக்காக இந்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சின் மருந்து விதிமுறைகள் ஆணைக்குழுவிற்கும் இலங்கையின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

07. கிழக்கு மாகாணத்தில் பல்துறை நன்கொடை உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்நிதி, திட்டமிடல்மற்றும்பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இலங்கை ஆளும்தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்ட இந்தியக் தூதுக்குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தியப் பிரதமரிடம் நான்கு விடயங்களை முன்வைத்தது.

முதலாவது - இலங்கைத் தீவில் இந்தியாவுக்கு மட்டும்தான் அதன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒரு பார்வை - பங்களிப்பு - உரித்து - இருக்க முடியும் என்பதை நாங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றோம் என்று குறிப்பிட்டோம். வேறு எந்த நாட்டுக்கும் தங்களுடைய தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் இலங்கையை அணுகும் உரிமையோ, அருகதையோ இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தினோம்.

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு என்ற அம்சத்தில் இலங்கைத் தீவு இந்தியாவுக்கு மற்றைய நாடுகளை விட முன்னுரிமை வழங்கிச் செயற்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டோம்.

விசேடமாக வடக்கு, கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்பதை இந்தச் சந்திப்பில் சொன்னோம். இரண்டாவது விடயம் - தமிழர்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஓரளவு நெருக்கமாக வந்த சர்வதேச ஆவணம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டோம். ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுத்த முயற்சியை ஒற்றையாட்சி என்ற நெருக்கடிக்குள் முடக்கியமையால் அது பலன் தரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

1987 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, இவ்வளவு காலத்தின் பின்னரும் இன்னமும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள், நடைமுறைப்படுத்துங்கள்என்றுஇந்தியாகோர வேண்டிய,- வலியுறுத்த வேண்டிய - அவல நிலை நீடிப்பதற்கு இது ஒற்றையாட்சிக்குள் முடக்கப்பட்டமையே காரணம் என்பதை விளக்கினோம்.

இந்த 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதால் மத்திய அரசே மேலானது, 13ஆம் திருத்தத்தினால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் மோதல் வருவதற்கு இடமில்லை என்று அப்போதே அதை ஒட்டிய ஒரு வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து இருந்தது.

ஒற்றையாட்சி முறைமைக்குள் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசுக்குத்தான் இருப்பதை அது உறுதிப்படுத்தியதை நாங்கள் தெளிவுபடுத்திச்சுட்டிக்காட்டினோம். ஆக, எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருப்பதால், அந்த ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பகிரவே இடமில்லை என்பதை இந்தியப் பிரதமருக்குச் சொன்னோம். இதுவே 38 வருடங்களாக நாங்கள் கண்ட அனுபவம் என்பதையும் தெரிவித்தோம்.

13ஆம் திருத்தத்தை ஒற்றை ஆட்சிக்குள் முடக்கியமையால்தான் இன்றும்கூட தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கின்றது என்பதை நாங்கள் விளங்கப்படுத்தினோம்.

இதனையே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு முதல் தடவையாக வந்து இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது, கூட்டுறவு சமஷ்டியே தீர்வுக்குவழிஎன்றுகுறிப்பிட்டமையைநாங்கள் நினைவுபடுத்தினோம். ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து,

சமஷ்டி முறைமைக்குக் கீழ் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி, ஒரு தீர்வைக் காண எத்தனித்தால் வழி பிறக்கும் என்பதை நாம் விளக்கினோம்.

இந்த விடயங்களை அடைவதற்காகத் தமிழ்க் கட்சிகளை டில்லிக்கு வரவழைத்துப் பேசுங்கள்என்றுநாங்கள்இந்தியப்பிரதமரைக் கோரினோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீறாமல், ஆனால் அதேநேரம் ஒற்றையாட்சி முறைமையைத் தாண்டி, ஒரு சமஷ்டி ஏற்பாட்டை முழுமையாக அடையக்கூடிய - இந்தியாவும் ஏற்றுக்கொள்ளத்தக்க - பொது நிலைப்பாடு ஒன்றை எட்டுவதற்கு உதவுமாறு நாங்கள் இந்தியப் பிரதமரை வேண்டினோம்.

மூன்றாவதாக - இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு, இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்தியா அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம் என்பதைத் தெரிவித்தோம்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதே நேரத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் வெளித் தரப்புகளுக்கு இப்பிராந்தியத்தில் காலூன்ற இடம் அளிக்கக்கூடாது என்ற எங்களது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினோம்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் இந்தியாவின் பாதுகாப்பு நோக்கோடு நோக்கப்படுகின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதேவேளையில் இந்தப் பிராந்தியத்தின் குடிசனப் பரம்பல் விகிதாசாரத்தை மாற்றி அமைக்காத விதத்தில் அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா முழு அளவில் ஈடுபட்டுப் பங்களிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டோம்.

மீனவர் பிரச்சினை பற்றி நான்காவதாகப் பேசினோம். இலங்கையின் வடக்கு-கிழக்கு மீனவர்கள் இன்று வாழ்வா,சாவா நிலைமையில் அவலப்படுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினோம். இந்தப் பிரச்சினை எந்த வழியிலாவது தீர்க்கப்பட்ட வேண்டும். அது தொடர இடமளிக்கக்கூடாது. இந்த விடயத்தில் வடக்கு - கிழக்கு மீனவ பிரதிநிதிகளும், அரசியல் பிரதிநிதிகளும், இந்தியாவுக்குச் சென்று, எங்கள் உறவுகளோடும் மீனவப் பிரதிநிதிகளோடும் பேசித்தீர்வுகாண்பதற்கானநடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தினோம்.

எங்கள் மீனவர்களின் இழப்புக்கு உரிய நட்டஈடுகள்கூடஇன்னும்வழங்கப்படவில்லை. அவைபற்றியும்கருத்தில்எடுக்கப்படவேண்டும் எனவும் நாம் வலியுறுத்தினோம் - - என்றார்.




காலைக்கதிர்
Kalaikkathir

## ருஸ்டிக்கான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்தமை அல்லது தொடர்ந்து தடுத்து வைத்துள்ளமை ஆகியவற்றை நியாயப்படுத்தக்கூடிய குற்றவியல் செயற்பாடுகள்எவற்றிற்குமானஆதாரங்களை வெளியிடக்கூடிய நிலையில் இலங்கை அதிகாரிகள் இல்லை.

இலங்கை அதிகாரிகள் உடனடியாக ருஸ்டிக்கான நியாயமான நடைமுறைகளை உறுதி செய்யவேண்டும், அவர் தனது குடும்பத்தவர்கள் சட்டத்தரணிகளை சந்திப்பதற்கு தடையற்ற அனுமதியை வழங்கவேண்டும். மேலும் அவர் சர்வதேச அளவில் குற்றம் எனக் கருதக்கூடிய எவற்றிலாவது ஈடுபட்டார் என்பதற்கான நம்பகத்தன்மை மிக்க ஆதாரங்களின் அடிப்படையிலான குற்றச்சாட்டுகள் இல்லாவிட்டால் அவரை விடுதலை செய்யவேண்டும் - என்றுள்ளது.

## இலங்கை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான பாதுகாப்புத் துறைசார்ந்த ஒத்துழைப்புகள் இராணுவ மற்றும் கடற்படை கூட்டுப் பயிற்சிகள், செயலமர்வுகள் போன்ற திட்டங்கள் ஊடாக வலுப்பெற்றுள்ளன.

இதனைத் தவிர வருடத்திற்கு இலங்கை பாதுகாப்பு படைகளின் 750 பேருக்கு சிறப்பு பயிற்சிகளை இந்தியா வழங்குகின்றது. இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகள் ஊடாக பல்வேறு நன்மைகள் இலங்கைக்கு கிடைக்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையில் 2023ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாதுகாப்பு கலந்துரையாடலில், இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேலும் விரிவுப்படுத்தல் மற்றும் செயற்றிறன் மிக்கதாக்குவது போன்ற விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போதே புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. இதன் பிரகாரம் ஏனைய நாடுகளுடன் இலங்கையின் இராஜதந்திர உறவுகள் தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் கடந்த ஜனவரி மாதத்தில் சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார்.

அதில்குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஆழமாகமீளாய்வுசெய்துகலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதியும் எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்தியாவுடன் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தினால் இரு நாடுகளின் தேசிய கொள்கைகளுக்கோ அல்லது சட்டக் கட்டமைப்பிற்கோ எவ்விதமான அழுத்தங்களும் ஏற்படாது.

இலங்கை - இந்திய புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின்போது, இருதரப்பு தேசிய மற்றும் இராணுவ சட்டங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் என்பவற்றை பாதுகாப்பதில் இருநாடுகளும் உறுதியுடன் உள்ளன.

இருநாடுகளின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தாது, உள்ளக விடயங்களில் தலையீடுகள் மற்றும் அழுத்தங்கள் ஏற்படுத்தப்படாதவாறு ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை பாதுகாப்பதற்கு இருநாடுகளும் ஒப்பந்தத்தின் ஊடாக ஒப்புதல் அளித்துள்ளன.

இலங்கை-இந்தியபாதுகாப்புபுரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இரு நாடுகளினதும் பாதுகாப்பு உறவுகள் வலுப்பெறும் என்பதுடன், பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்புகள், அறிவியல் மற்றும் தகவல் பரிமாற்றம் மேலும் விரிவாக்கப்படும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், 5 ஆண்டுகளுக்கு அமலில் இருக்குமென முன்மொழியப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினர் மூன்று மாத முன் அறிவிப்பு மூலம் ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளும் உரிமையும் உள்ளது என்றார்.

## அமெரிக்க....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்டுள்ளபரிந்துரைகள்தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்த விடயத்தில்பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியமான நிவாரணங்கள் குறித்து இலங்கை ஆளும்தரப்பு விரைவில் அமெரிக்க ஆளும்தரப்புடன் கலந்துரையாடல்களை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வர்த்தக அமைச்சின் செயலாளர் ஏ.விமலேந்திராஜா, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, வெளிவிவகார அமைச்சின் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் தர்ஷன பெரேரா, இலங்கை வணிகச் சபையின் தலைமைபொருளாதார கொள்கைஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, பிராண்டிக்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமர், மாஸ் ஹோல்டிங்ஸ் இணை நிறுவனர் ஷெராட் அமலீன், ஹேலிஸ் குழுமத் தலைவர் மோகன் பண்டிதகே மற்றும் ஆனந்த கல்தேரா ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மேலும், தொழில் அமைச்சரும் பொருளாதாரஅபிவிருத்திபிரதிஅமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## அபிவிருத்தி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸாநாயக்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதிஅலுவலகத்தில்நேற்றுசனிக்கிழமை இந்திய பிரதமர் மோடி முன்னிலையில் விசேட உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஆளும் ஆட்சியமைத்ததன் பின்னர் இலங்கைக்கு வருகை தரும் முதலாவது அரச தலைவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி. அவர் தலைமையிலான இராஜதந்திர தூதுக்குழுவை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சம்பிரதாயபூர்வமற்ற அரசியல் பின்னணியில் வந்த பிரதமர் நரேந்திர மோடியால், இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஒப்பான மாற்றங்களை இலங்கையிலும் ஏற்படுத்தவேண்டும் என்ற இலக்குடன் ஆட்சியமைத்துள்ள எமது ஆளும்தரப்புக்கு இந்த வருகை வரலாற்று முக்கியத்துவமுடையதாகும்.

இந்தவருகைஇருநாடுகளுக்குமிடையிலான நட்புறவை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. 50 கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்தில் பூகோளத்தில் எம்மிலிருந்து பிரிந்திருக்கின்ற இந்தியா-இலங்கைக்கிடையிலானநெருக்கமானது, இந்தநெருக்கத்தைவிட அதிகநெருக்கமானதாகும். உலகளாவிய அபிவிருத்திகளில் இன்று இந்தியா முன்னிலை வகிக்கின்றது.

பிராந்திய வல்லரசாக மாத்திரமின்றி உலகளாவியரீதியில்வல்லரசாகவும்இந்தியாநிலை கொண்டுள்ளமையை நாம் பாராட்டுகின்றோம். இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுமே தென்னாசியாவின் எழுச்சியையே நம்புகின்றன. 2500 ஆண்டுகளுக்கும் மேலாக சமூக, கலாசார, மதத் தொடர்புகள் உள்ள அயல் நாடுகளாக இவை காணப்படுகின்றன.

1996இல் உலகக் கிண்ண கிரிக்கட் போட்டியின்போது பாதுகாப்புக் காரணியை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு வருகை தர இரு அணிகள் மறுத்த நிலையில், இந்திய அணி இங்கு வருகைதந்தமை இலங்கை மீது இந்தியா கொண்டுள்ள நம்பிக்கைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். அதற்கு என்றும் மதிப்புள்ளவர்களாக இருப்போம்.

இலங்கை தேசிய அபிலாஷைகளுக்கு முன்னுரிமையளித்து அமைதி மற்றும் இறையான்மையை மேம்படுத்திக் கொண்டு செயற்படும் வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுகிறது. இருதரப்பினருக்கிடையிலான பேச்சுசின் போது, இருதரப்பு ஒத்துழைப்புக்களின் சமகால நிலவரம் தொடர்பில் முழுமையாக மீளாய்வு செய்தோம்.

அந்நியோன்யமாக ஆர்வம் செலுத்தும் துறைகளில் எமது உறுதிப்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறை தொடர்பில் கருத்துக்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. எனது டில்லிப்பயணத்தைநினைவுகூர்ந்தஅதேவேளை, அதன்போது எட்டப்பட்ட கூட்டு இணக்கப்பாட்டின் உள்ளடக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையின் அர்ப்பணிப்பு தொடர்பில் என்னால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல், அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாட்டுக்க வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்களுக்காக நான் பிரதமர் மோடி உள்ளிட்ட இந்திய ஆளும்தரப்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதமர் மோடியின் தலைமைத்துவம் மற்றும் இந்தியாவை சர்வதேசத்திற்கு கொண்டுச் சென்ற அவரது மாற்றத்துக்கான ஆரம்பகட்ட முயற்சிகள் மற்றும் இலங்கை தொடர்பில் அவர் கொண்டிருக்கும் தனிப்பட்ட நட்புறவு காரணமாக பொருளாதார மறுசீரமைப்பு, உடகட்டமைப்பு அபிவிருத்திகளை பலப்படுத்தல் மற்றும் சமூக அபிவிருத்தி உள்ளிட்டத் துறைகளில் இலங்கையர்களான எமக்கு பெருமளவான பிரதிபலன்கள் கிடைத்துள்ளன.

'அயலவருக்கு முதலிடம்' என்ற இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வடிவத்திற்கு அமைவாக எமது நாட்டின் பொருளாதார மீட்சிக்கும் ஸ்திரமான பொருளாதார பயணத்திற்கு இந்தியா காண்பிக்கும் முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்புக்காக பிரதமர் மோடிக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

சாத்தியமான கடன் மறுசீரமைப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி பயணிக்கும் எமது தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து நான் பிரதமர் மோடிக்கு விளக்கமளித்தேன். கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின்போது இந்திய அரசு வழங்கிய ஒத்துழைப்பிற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதும் காணப்படுகின்ற சிறப்பான பாதுகாப்பு ஒத்துழைப்புக்களைமேலும்பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடினோம். இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வலயத்துக்கு பாதகமான எந்தவொரு செயல்பாட்டுக்கும் இலங்கைக்குள் இடமளியோம் என்ற நிலைப்பாட்டினை மீண்டும் உறுதிப்படுத்தினேன்.

அந்நியோன்யமான பொருளாதார வலயங்களுக்கு அப்பால் சமுத்திர வலயங்களுக்கு வெளியிலானஎல்லைகளைஅமைப்பதற்கு ஐக்கிய நாடுகளின் சமுத்திர எல்லைகள் தொடர்பான ஆணைக்குழுவிடம் சமர்பிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் உரிமைத்துவம் தொடர்பிலான தொழில்நுட்ப இருதரப்பு பேச்சுக்களை விரைவில் நடத்துவதற்கான தலையீடை பிரதமர் மோடியிடம் நான் கோரினேன்.

வளர்ச்சி, புத்தாக்கம், வினைத்திறனை மேம்படுத்த டிஜிட்டல் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ததன் முக்கியத்துவத்தை இலங்கை அறிந்துகொண்டுள்ளது. அதற்கான பன்முக துறைகளில் ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய டிஜிட்டல் மயமாக்கல் ஒத்துழைப்பு குறித்தும் நாங்கள் கலந்துரையாடினோம். இலங்கையின் டிஜிட்டல் அடையாளம் வேலைத் திட்டத்தை செயற்படுத்த 300 கோடி இந்திய ரூபா நிதி அன்பளிப்பை வழங்கியமைக்கான இந்திய ஆளும்தரப்பிற்கு நான் நன்றி சொல்கிறேன்.

எமது பொருளாதார மற்றும் தனிப்பட்ட ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளும்போது தொடர்பாடல் உரை தீர்மானமிக்க வகிபாகத்தை கொண்டிருக்கும். மஹவ - ஓமந்தை தொடருந்து வீதியை அமைப்பதற்கான வழங்கிய ஒத்துழைப்பிற்கும் மஹவ - அநுராதபுரம் தொடருந்து நிலையங்களில் அமைக்கப்படும் சமிக்ஞை கட்டமைப்புக்காக வழங்கிய 14.9 மில்லியன் டொலர்கள் கடன் உதவியை அன்பளிப்பாக மாற்றியமைக்காகவும் பிரதமர் மோடிக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். பிரதமர் மோடியும் நானும் இந்த வேலைத்திட்டத்தை நாளை அநுராதபுரத்தில் ஆரம்பிக்க உள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் நம்பகமான, தாங்கிக் கொள்ளக்கூடிய, காலோசிதமான, எரிசக்தி வளங்களை பயன்படுத்துவதை உறுதிப்படுத்து வதற்கான எமது ஆளும்தரப்பின் முன்னுரிமை மற்றும் அந்த துறைகளுக்குள் மேலும் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய இணக்கப்பாடுகள் தொடர்பில் நாங்கள் விரிவாக கலந்துரையாடினோம்.

அதேபோல் அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் விவசாயம் தொடர்பில் கருத்துகளை பரிமாறிக்கொண்டோம். இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு குறித்தும் பிரதமர் மோடியும் நானும் கலந்துரையாடினோம். பிரதான ஒத்துழைப்பு துறைகளில் அதிகளவான இந்திய முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்வதை ஊக்குவிக்க இந்திய ஆளும்தரப்பு மற்றும் பிரதமர் மோடியின் ஒத்துழைப்புக்களை நாங்கள் கோரினோம்.

சுற்றுலாத்துறை ஒத்துழைப்பு குறித்தும் எமது கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. அண்மைக் காலமாக அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வருகின்றனர். அதன்படி இந்தத் துறையின் கேள்வியை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவது குறித்தும் கருத்துப் பரிமாறிக்கொண் டோம். எமது வெளிநாட்டு பணியாளர்கள் பயனடையும் வகையில் இருநாடுகளுக்கும் இடையிலான சமூக பாதுகாப்பு உடன்படிக்கை ளுக்கானபிரதமர்மோடியின்தலையீட்டையும்நாம் கோரியுள்ளோம். மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைஎட்டக்கூடியஒத்துழைப்புடக்கூடிய அணுகு முறைகள் குறித்து நாம் கலந்துரையாடினோம்.

இரு நாடுகளிலும் தடைசெய்யப்பட்ட முறைமையான, இழுவை வலை மீன்பிடி முறையால் ஏற்படும் கடுமையான சுற்றாடல் பாதிப்பை அறிந்துகொண்டு இந்த செயற்பாட்டை நிறுத்தல், சட்டவிரோதமாக நிர்ணயிக்கப்டாத அல்லது வரையறுக்கப்படாத மீன்களை பிடிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டோம்.

இன்றைய தினம் எரிசக்தி ஒத்துழைப்பு, சுகாதார துறை ஒத்துழைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள்விஸ்தரிப்பு, கடன்மறுசீரமைப்புஉள்ளிட்ட துறைகளுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் இருதரப்பு ஒப்பந்தங்கள் பலவற்றை பரிமாற்றிக்கொள்ளும் நிகழ்வில் பங்கேற்க கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது.

அது எமது தொடர்புகளின் மற்றுமொரு அடியாகும் என்பது உறுதி. எமது தேசிய மின் உற்பத்தி கட்டமைப்பிற்கு 120 மெகாவோட் மின்சாரத்தை இணைக்கும் சம்பூர் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுதல், இலங்கை முழுவதிலும் உள்ள 5000 மதத் தலங்களுக்கு சூரிய மின் கட்டமைப்பை விநியோகிக்கும் திட்டத்தை ஆரம்பிக்கவும் இலங்கையிலுள்ள ஒரேயொரு வெப்பநிலை கட்டுப்பாட்டு களஞ்சியமான தம்புள்ளையின் விவசாய களஞ்சியத்தை ஒன்லைன் முறை மூலம் திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதமர் மோடியுடன் இணைந்துகொள்ள கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த மக்கள் மையத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக வழங்கிய கைத்தொழில் ஒத்துழைப்புக்கு இந்திய ஆளும்தரப்பிற்கு நன்றி சொல்கிறேன். இந்தியாவிடமிருந்து எமக்கு கிடைத்த மிக உயர்வான பரிசான புத்த மதத்தின் வருகையின் பின்னர் எமது நாட்டில் ஏற்பட்ட துறைசார் வளர்ச்சிக்கு களம் அமைத்த அநுராதபுரத்திற்கு பிரமர் மோடி மற்றும் தூதுக்குழு விஜயம் செய்யவுள்ளதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். அநுராதபுரத்தில் ஜய ஶ்ரீமகா போதியையும்தரிசிக்கவுள்ளார். கடந்தபொருளாதார நெருக்கடியின் போது இலங்கையின் ஜனநாயகம் மற்றும்ஸ்திரத்ன்மையைஉறுதிசெய்வதற்காகவும் பொருளாதாரஅபிவிருத்திக்காகவும்இந்தியாமேலும் ஒத்துழைப்புவழங்குவதாகஉறுதியளித்தமைக்காக பிரதமர் மோடி அறிவித்தார்.

இலங்கை கட்டியெழுப்ப பங்காளியாகவும், நண்பனாகவும் இந்திய அருகில் இருக்கும் என்பதை உறுதிப்படுத்திய அந்த ஒத்துழைப்பு பெரும் பலமானது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். அபிவிருத்தி, புத்தாக்கம், இந்து சமுத்திர வலயத்தின் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, சமாதானம், எமது மக்களினதும் பங்களிப்புடன் பொதுவான எதிர்கால பயணத்தை தொடர்வதற்கு எமதுஇருநாடுகளினதும்மக்களுக்குவாய்ப்பளிக்க வேண்டும்.

இந்தியாவும் இலங்கையில் வரைப்படத்திலிருக்கும் இரு நாடுகளாக மட்டும் அன்றி, வரலாற்றினால் வலுவடைந்த, பொருளாதாரத்தினால் இணைந்துகொண்ட நட்புறவால் ஒன்றுபட்டிருக்கும் தேசங்கள் என்பதை வலியுறுத்த வேண்டும்.

அதேபோல் பிரதமர் மோடியின் 'சப்பா தாஸ், சப்பா விகாஸ் திட்டங்கள்' காலோசிதமானதும் நடைமுறைக்கு அமைவானதுமான திட்டம் என்ற வகையில் அவற்றை வரவேற்கிறோம். பிரதமர் நரேந்திர மோடி இலங்கை மற்றும் அதன் மக்களுக்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் வழங்கிய ஒத்துழைப்பிற்கு துறைசார் நட்புறவு மற்றும் அணி சேரா பன்முக ஒத்துழைப்பின் அடையாளமாக வெளிநாட்டு அரச தலைவர் ஒருவருக்கு இலங்கையினால் வழங்கப்படும் மிக உயர்வான கௌரவமாக 'இலங்கை மித்ர விபூசன' பதக்கத்தை அவருக்கு வழங்க இலங்கை ஆளும்தரப்பு தீர்மானித்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இந்த கௌரவ பதக்கம் இலங்கையின் மக்கள் மீதான அவர்களின் நட்பு மற்றும் ஒத்துழைப்பை வழங்கும் வெளிநாட்டுத் தலைவர்களைப் பாராட்டி வழங்கப்படும் கௌரவ பதக்கமாகும். எல்லா நேரங்களிலும் இலங்கைக்காக முன்னிலையான பிரதமர் நரேந்திர மோடி இந்த கௌரவத்திற்கு மிகத் தகுதியானவர் என்று நம்புகிறோம். இலங்கையர் நாம் மாற்றத்துக்கான பாதையில் செல்கிறோம். அதனை நாங்கள் 'வளமான நாடு - அழகான வாழ்வு' என்ற தேசிய கொள்கையாக அறிமுகப்படுத்துகிறோம்.

பொருளாதார முன்னேற்றம், சமூக நீதி, எல்லா பிரஜைகளுக்கும் அவர்களின் பின்னணி எவ்வாறானதாக இருந்தாலும் முன்னேற்றம் அடைவதற்கான வழியாக அதனை கட்டியெழுப்பியுள்ளோம். அயலவர்களாகவும், பங்காளிகளாகவும், வரலாற்று நண்பர்களாகவும் இணைந்து அபிவிருத்தி நிறைந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப எதிர்பார்க்கிறோம். மக்களை மையப்படுத்திய அரசியல் மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கும் வேளையில் இந்த முக்கியமான தருணத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரின் தூதுக் குழுவிற்கு எனது நன்றியை மீண்டும் கூறுகின்றேன் என்றார்.


நான்கு வகை நிலத்திலும்
காணி விற்பனைக்கு!
Premium Lands with 100% Legal Security
8 இலட்சம் முதல்
* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.
விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு
என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!
முல்லை
எழுதுமட்டுவாழ்
மருதம்
கிழக்கு அரியாலை
குறிஞ்சி
மலையகம்
(ஹப்புத்தளை நகர்)
நெய்தல்
மட்டக்களப்பு
(வாவிக் கரையோரம்)
ஏப்ரல் 14ம் திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!
இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!
இனிமையான வாழ்விற்கு..!
GOOD GIFT
PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 743 5557

# கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று அஞ்சல் வாக்களிப்பு செயலமர்வு

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பாக அஞ்சல் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையினருக்கான செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்றது.

இச் செயலமர்வில் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் அஞ்சல் மூல அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படைகளின் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக, தேர்தல் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் சந்தன டி சில்வா, பிரதி ஆணையாளார் கே. ஜே. எஸ். மகாதேவ மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் வே. சிவராசா ஆகியோரால் விளக்கமளிக்கப்பட்டது.





இச் செயலமர்வில் நியமிக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையினர்களின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். 316

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றி வியூகம் குறித்து தேசிய மக்கள் சக்தி அபேட்சகர்களுக்கு விளக்கமளிப்பு

(ஸாகிர்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனை பிரதேசசபை ஊடாகப் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் அபேட்சகர்களுக்களுடனான கலந்துரையாடலொன்று அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் கீழ் அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபி ஆகிய பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறு வெற்றி பெறலாம்?, அதற்கான தேர்தல் வியூகங்களை எவ்வாறு வகுக்கலாம்? என்பது தொடர்பான வெற்றி வியூகக் கலந்துரையாடலில் அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்திக் குழு தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு தனது காத்திரமான கருத்துக்களை முன்வைத்து தெளிவுபடுத்தினார்.







# சமூக முரண்பாடுகளை தீர்க்கும் புதிய ஏ.டி.ஆர். முறை அறிமுகம்

(முஹம்மட் சஜித்)

முரண்பாடு என்பது இரு அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்கள், குழுக்கள் அல்லது அமைப்புகளுக்கிடையில் கருத்து, நம்பிக்கை, மதிப்பு, ஆதிக்கம் அல்லது ஆதாயங்களில் உள்ள வேறுபாடுகளால் ஏற்படும் எதிர்ப்புணர்வு மற்றும் மோதலான நிலைமையாகும்.'

முரண்பாடு ஒரு சமூக அவசியம் எனக் கருதப்படுகிறது. சிலர் அதை சமூக மாற்றத்திற்கான தேவையான சக்தியாக காண்கிறார்கள், இன்னும் சிலர் தவிர்க்கவே முடியாத அரசியல் மற்றும் உளவியல் நிகழ்வாக கருதுகின்றனர். முரண்பாட்டை சரியான முறையில் சமாளிக்க முடிந்தால், அது முன்னேற்றத்திற்கான ஒரு வழியாக மாறலாம்.

முரண்பாடுகள் பொதுவாக சமூகத்தில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக மாறிவிட்டது அவ்வாறு இருக்கையில் இந்த முரண்பாட்டினை தீர்க்கின்ற முறைகளாக பேச்சுவார்த்தை, சமரசம், மத்தியஸ்தம், வழக்கறிஞர் மத்தியஸ்தம், சமாதானம் , கட்டாய தீர்வு ஒதுக்கல் இவ்வாறான முரண்பாடு தீர்வு முறைகள் சமூக, அரசியல், தொழில்நுட்ப மற்றும் குடும்பத்துறைகளில் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன.

எந்த முறையை தேர்வு செய்வது என்பது முரண்பாட்டின் தன்மை, அதன் தாக்கம், மற்றும் உள்ள கலாசார, அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்து மாறுபடும். இவ்வாறான தீர்வு வழிகளை பயன்படுத்தி தீர்க்கின்ற நிலையங்களாக போலீஸ் நீதிமன்றம் காளி நீதிமன்றம் மத்தியஸ்த சபை இன்னும் சில அமைப்புகள் பொதுவாக செயற்படுகின்றன.

இவ்வாறு செயல்படுகின்ற அமைப்புகளின் ஊடாக கிடைக்கப்பெறுகின்றதீர்வானதுசம்பந்தப்பட்டஇருதரப்பினருக்கு அல்லது சம்பந்தப்பட்ட நபர்களுக்கு திருப்திகரமான முறையில் அமையப்பெறுகின்றதா என்ற கேள்வி எழுந்த வண்ணமே இருக்கின்றது.

மேலும் இவ்வாறான அமைப்புகளின் மூலமாக முரண்பாட்டு தீர்வு ஒன்று மேற்கொள்ளப்படுகின்ற பொழுது நேர வின்விரயம் செலவு தீர்வு இருதரப்புக்கும் வெற்றி உள்ளதா அல்லது திருப்தி உள்ளதா அல்லது இரு தரப்புகளுக்கும் உடன்பாடு உள்ளதா போன்ற விடயங்கள் பாதகமாக அமைவதனை காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு இருக்கின்ற நிலையில் இம் முரண்பாட்டு முறையில் சிறந்ததாக கருதப்படுகின்ற மத்தியஸ்தம் செய்யும் முறையாகும்.

சட்டம் சார்ந்த விடயங்களுக்கு அப்பால் சமூகத்தில் எழுகின்ற பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக இந்த மத்தியஸ்த வழிமுறையை பயன்படுத்திக் கொள்ள முடியும் இதற்காக பயன்படுத்தப்படுகின்ற வழிமுறையாக மாற்று வழியில் பிணக்கு தீர்வு முறை (ஏ.டி.ஆர்) வழிமுறையானது பின்பற்றப்பட்டு வருகின்றது.

பொதுமக்களுக்கு விரைவாகவும் நியாயமாகவும் தீர்வு கிடைக்க மாற்று வழிமுறைகள் ( ஏ.டி.ஆர்) பல உலகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மத்தியஸ்தம் பற்றி பார்த்தால் மத்தியஸ்தம் என்பது இரு தரப்பினருக்கும் ஏற்றவாறு ஒரு தீர்வை ஏற்படுத்த உதவும் முறையாகும். இதில் மூன்றாம் தரப்பினராக ஒரு நடுநிலை நபர் (மத்தியஸ்தர் ) இருவரிடமும் பேசி, சமரசம் செய்து, நேரடியாக நீதிமன்ற நடவடிக்கையைத் தவிர்க்க உதவுவார். இவ்வாறு மேற்கொள்வதன் மூலமாக இரண்டு தரப்பினரும் உடன் உடன்பாட்டுக்கு வருவதன் மூலமாக வெற்றிகரமான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

மூன்றாம் தரப்பினரான மத்தியஸ்தர் ஒரு சரியான தீர்வு பெறும் வகையில் இரு தரப்பினரிடமும் கலந்துரையாடி சமரசம் செய்ய உதவுவார்.

சட்டத்தால் கட்டாயமாக ஏற்க வேண்டிய நிலை இல்லை, ஆனால் இரு தரப்பும் சமாதானமாக ஒப்புக்கொள்ள முடியும். குடும்ப வழக்குகள் (திருமண விவகாரங்கள், சொத்து பிரச்சனைகள்).

தொழில் தகராறுகள் (ஊழியர்–நிறுவனம் இடையே).

மத்தியஸ்தம் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்?

1. மத்தியஸ்தரை தேர்வு செய்தல்:

ஒரு நிபுணரான, நடுநிலைமையான நண்பர் மத்தியஸ்தராக செயல்பட வேண்டும். அவர் பொது நலன் அடிப்படையில், எந்த ஒரு தரப்பிற்கும் சார்பாக இல்லாமல் செயல்பட வேண்டும்.

2. பிரச்சினையை விளக்குதல்:

இரு தரப்பினரும் தங்களது நிலைப்பாட்டை விளக்குவதற்கானவாய்ப்பைப் பெற வேண்டும். உண்மையான பிரச்சினை மற்றும் அதன் காரணங்கள் வெளிச்சத்திற்கு வர வேண்டும்.

3. பேச்சுவார்த்தை மற்றும் சர்ச்சை தீர்வு:

மத்தியஸ்தர் முதன்முறையாக இருவருடனும் தனிப்பட்ட முறையில் பேசி கருத்துகளை பெறலாம். பின்னர் இருவரும் இணைந்து பேசியும் சரியான முடிவுக்கு வர முயற்சி செய்யலாம்.

4. தீர்வு கண்டறிதல்:

இருவரும் ஏற்கக்கூடிய ஒரு தீர்வு வகுக்கப்படும். அதை எழுத்துப் பதிவு செய்து, இருவரும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

5. முடிவை நிறைவேற்றுதல்:

முடிவை இரு தரப்பும் நடைமுறைப்படுத்த வேண்டும். சரியாக செயல்படுகிறார்களா என்று கண்காணிக்கலாம்.

மத்தியஸ்தம் செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள்

நேரம் மற்றும் செலவு மிச்சம் நீதிமன்ற வழக்குகளை விட மிகவும் விரைவாகவும் குறைந்த செலவில் முடிக்கலாம்.

நடுநிலை தீர்வு முறையான தீர்வுகளுடன் இருவரும் சமரசம் செய்ய அதிக வாய்ப்பு இருக்கும்.உரிமை மற்றும் தனிப்பட்ட உரிமைகளை

நீதிமன்ற வழக்குகளால் தனிமனித விபரங்கள் வெளியேறலாம், ஆனால் மத்தியஸ்தம் இரகசியமாகவே தொடரும்.

விரும்பிய முடிவை ஏற்படுத்தும் வசதி

நீதிமன்றம் கட்டாய தீர்வு வழங்கும், ஆனால் மத்தியஸ்தத்தில் இருவரும் சந்தோஷமாக ஏற்கும் முடிவை உருவாக்க முடியும்.

நட்பு மற்றும் வணிக உறவுகளை பாதுகாத்தல்

குடும்ப உறுப்பினர்கள், தொழில் நிறுவனங்கள் போன்றவர்கள் நல்லுறவை கெடாமல் பிரச்சனையை தீர்க்கலாம்.

சமுதாய அமைதிக்கு உதவுதல் சமூக மற்றும் சமூக–மத பிரச்சனைகள் மத்தியஸ்தம் மூலம் தீர்க்கப்படும்போது சமூக அமைதிக்குத் துணைபுரியும்.

இவ்வாறு மேற்கொள்ளப்படுவதன் மூலமாக முரண்பாடுடன் தொடர்புடைய இரண்டு நபர்களுக்குமே அவர்கள் விரும்புகின்ற தேவைகளின் அடிப்படையில் அல்லது அவர்களின் நோக்கங்களின் அடிப்படையில் அவர்களை தீர்வுகளை அவர்களாகவே பேசி தீர்மானிக்கின்ற ஓர் நிலையினை உருவாக்கி அதனை முறையாக ஒழுங்குபடுத்தி மத்தியஸ்தம் செயற்படுகின்ற பொழுது இரு தரப்புகளுக்கும் இடையில் வெற்றி வெற்றி என்று அடிப்படையில் தீர்வு கிடைக்கப் பெறுகின்றது இவ்வாறு கிடைக்கப்பெற தீர்வு மூலமாக அவர்களுக்கிடையிலே நட்புறவு வளர்க்கப்படுவதும் மேலும் இப்ப பிரச்சனை தொடர்பாக மேலும் பல பக்க பிரச்சனைகளை உருவாக்காமல் அல்லது முரண்பாடு தீவிரம் அடையாமல் தடுத்துக் கொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக இது அமையப்பெறுகின்றது.

எனவேதான் முரண்பாடுகளை தீர்க்கின்ற சமூகத்தில் செயல்படுகின்ற அமைப்புகள் முரண்பாடு ஒன்றினை தீர்க்கின்ற பொழுது ஏற்படக் கூடிய வகையில் செயல்படும் பொழுது முரண்பாடுகள் மேலும் வலுப்பெறாமல் முடிவதற்கு வாய்ப்பாக அமையும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2025இல் வெளியிடப்பெற்றது